சமூகத்திற்கு மிக நெருக்கமானவர்களாகவும் சமூக மாற்றத்திற்கான விஷயங்களில் தலையிடும் முதல் நபர்களாகவும் இருப்பவர்கள் முன்னணிக் களப்பணியாளர்கள். கிராமப்புறங்களில் சமூகப் பழக்க வழக்கங்கள், பாலினம் சார்ந்தவன் முறைகள், குழந்தைத்திருமணம்போன்றவை குறித்த உள்ளூர் செயற்பாடுகளை உடனடியாக அறியக்கூடியவர்கள் இவர்கள் தான். சட்டங்களாலும் திட்டங்களாலும் மட்டுமின்றி மனிதர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம்தான் பாலியல்சார்ந்த வன்முறை, குழந்தைத் திருமணம் போன்ற மனிதஉரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவரமுடியும். எனவே, குழந்தைத் திருமணம் ஏன் நடக்கிறது எப்படித் தடுக்கவேண்டும் என்ற செயல் உத்திகளை மனதில் கொண்டு முன்னணி களப்பணியாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள பயிற்சிக்கையேடு இது

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

இளந்தென்றல்

# முன்னணிக் களப் பணியாளர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு



# முன்னணிக் களப் பணியாளர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு

## குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னணி களப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சமுதாயப் பணியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கான பயிற்சிக் கையேடு

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின்
தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

unicef
for every child

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

முன்னணிக் களப்பணியாளர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிக் கையேடு

குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னணி களப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சமுதாயப் பணியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கான பயிற்சிக் கையேடு

Capacity Building Module for Frontline Workers

Resource Book for Community Workers and Trainers in Sensitising and Training Frontline Workers on addressing issues related to Child Marriage and Violence.

முதல் பதிப்பு: மார்ச், 2020

First Edition: March, 2020

வெளியீடு :

மாநில கருவூல மையம், சென்னை - 600 020.

State Resource Centre, Chennai - 600 020.

Email: sbtamilnadusrc@gmail.com

044-24914147

வடிவமைப்பு:

THY Designers & Computers

Triplicane, Chennai - 600 005

044-42113807

நன்றி:

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக யுனிசெஃப் (UNICEF) அமைப்பும் பிரேக் த்ரு (Break Through, New Delhi ) நிறுவனமும் இணைந்து ஆங்கிலத்தில் உருவாக்கிய கருத்துப் புத்தகத்தின் தமிழ் வடிவம்.

தமிழ் வடிவம்: மாநில கருவூல மையம்

தொடர்புக்கு: sbtamilnadusrc@gmail.com

# அறிமுகம்

சமூகத்திற்கு மிக நெருக்கமானவர்களாகவும் சமூக மாற்றத்திற்கான விஷயங்களில் தலையிடும் முதல் நபர்களாகவும் இருப்பவர்கள் முன்னணிக் களப்பணியாளர்கள். கிராமப்புறங்களில் சமூகப் பழக்கவழக்கங்கள், பாலினம் சார்ந்த வன்முறைகள், குழந்தைத் திருமணம் போன்றவை குறித்த உள்ளூர் செயற்பாடுகளை உடனடியாக அறியக் கூடியவர்கள் இவர்கள்தான். குழந்தைத் திருமணப் பிரச்சினை குறித்து உரையாடுவதில் இவர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது. ஆசிரியர்கள், மாணவர்களுடன் நெருக்கமாக இருப்பதால் வளரிளம் பருவத்தினரின் வாழ்க்கையில் கணிசமான தாக்கம் ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள்.

சட்டங்களாலும் திட்டங்களாலும் மட்டுமின்றி மனிதர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம்தான் பாலியல் சார்ந்த வன்முறை, குழந்தைத் திருமணம் போன்ற மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவர முடியும். எனவே, குழந்தைத் திருமணம் ஏன் நடக்கிறது எப்படித் தடுக்க வேண்டும் என்ற செயல் உத்திகளை மனதில் கொண்டு முன்னணிக் களப்பணியாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது இந்தப் பயிற்சிக் கையேடு.

இதன்மூலம், வளரிளம் பருவ ஆண்கள், பெண்கள், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் போன்ற அனைத்துத் தரப்பினருடனும் தொடர்பில் உள்ள முன்னணிக் களப்பணியாளர்கள் குழந்தைத் திருமணம் தொடர்பான விழிப்புணர்வைப் பெறுவதுடன் இப்பிரச்சினையை கையாள்வது குறித்த திறன்களைப் பெறுவார்கள். அத்துடன், இதுகுறித்து மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் முறைகளையும் தெரிந்து கொள்வார்கள்.

மதத்தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், பெற்றோர்கள் போன்ற பங்காளர்கள் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பணியில் ஈடுபடுவதற்கு உதவியாகவும் இந்தப் பயிற்சிக் கையேடு இருக்கும்.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காக **யுனிசெஃப், பிரேக் த்ரு** ஆகிய அமைப்புகள் ஆங்கிலத்தில் உருவாக்கிய இந்தக் கருத்துப் புத்தகத்துக்கு மாநில கருவூல மையம் தமிழ் வடிவம் கொடுத்துள்ளது. இந்த முயற்சிக்குத் துணைநிற்கும் **தமிழக அரசின் சமூக நலத்துறை, யுனிசெஃப்** அமைப்பு ஆகியவை தரும் ஒத்துழைப்பையும் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்கு க்கொண்டுவர முடியும். இதற்கான கூட்டுப் பயணத்தைத் தொடங்குவோம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | முன்னணிக் களப் பணியாளர்களுக்காக இந்தப் பயிற்சிக்கையேடு ஏன் உருவாக்கப்பட்டது? | 2 |
| 2 | முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேட்டைத் தயாரிக்கும் போது, என்னென்ன காரணிகள் கருத்தில் கொள்ளப்பட்டன? | 3 |
| 3 | முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு தயாரிக்கும் போது, அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் திறன்கள் என்று எவையெல்லாம் அடையாளம் காணப்பட்டன? | 5 |
| 4 | முன்னணிக் களப் பணியாளர்களின் பயிற்சிக்கான கால அளவு மற்றும் பயிற்சி வழங்கும் முறை எப்படி உள்ளது? | 6 |
| 5 | முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள் எப்படி நடத்தப்பட வேண்டும்? | 6 |


## அமர்வுகள்:


| | | | |
|---|---|---|---|
| 6 | அமர்வு - 1 | அறிமுகம், அறிமுக விளையாட்டு மற்றும் அடிப்படை விதிமுறைகள் | 9 |
| 7 | அமர்வு - 2 | மனித உரிமைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல் | 13 |
| 8 | அமர்வு - 3 | சமூகப் பாலினம் மற்றும் உடற்கூறு பாலினம் பற்றி புரிந்து கொள்ளுதல் | 18 |
| 9 | அமர்வு - 4 | சமூகப் பாலினம் மற்றும் தெரிவு செய்தல் | 23 |
| 10 | அமர்வு - 5 | மகனின் மதிப்பு மற்றும் மகளின் மதிப்பு | 29 |
| 11 | அமர்வு - 6 | குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல் | 35 |
| 12 | அமர்வு - 7 | குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள் | 46 |
| 13 | அமர்வு - 8 | பார்வை மற்றும் யதார்த்தம் | 51 |
| 14 | அமர்வு - 9 | பாலினச் சார்பு பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் | 57 |
| 15 | அமர்வு - 10 | நமது பங்கேற்பு | 63 |
| 16 | அமர்வு - 11 | குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உத்திகளைத் திட்டமிடல் | 68 |
| 17 | அமர்வு - 12 | நான் என்ன செய்ய முடியும்? | 73 |


## இணைப்புகள்


| | | | |
|---|---|---|---|
| 18 | இணைப்பு - 1 | மனித உரிமைகள் என்றால் என்ன? | 80 |
| 19 | இணைப்பு - 2 | உறுதி மொழி ஏற்பு | 83 |



# குழந்தைத் திருமணம் மற்றும் வன்முறைக்கு தீர்வுகாண முன்னணிக் களப் பணியாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்

## முன்னணிக் களப் பணியாளர்களுக்காக இப்பயிற்சிக்கையேடு ஏன் உருவாக்கப்பட்டது?

முன்னணிக் களப்பணியாளர்கள் தான் சமூகத்திற்கு மிக நெருக்கமானவர்களாகவும் சமூக மாற்றத்திற்கான விஷயங்களில் தலையிடும் முதல் நபர்களாகவும் முகவர்களாகவும் இருக்கிறார்கள். பொதுவாக முன்னணிக் களப்பணியாளர்கள், அதே சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்களாகவும் அதே பகுதியில் பணிபுரிபவர்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயத்தில் ஆசிரியர்கள், மாணவர்களுடன் மிக நெருக்கமாக இருப்பதால் வளரிளம் பருவத்தினரின் வாழ்க்கையில் கணிசமான தாக்கம் ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த பங்காளர்கள், தங்கள் சமுதாயத்தின் அணுகுமுறை / மனப்பான்மை மற்றும் பழக்கவழக்கங்கள் பற்றி நன்கு அறிந்தவர்களாக இருப்பதால், பாரபட்சமான விதிமுறைகளை, குறிப்பாக குழந்தை உரிமைகள் தொடர்பான விஷயங்களில் மாற்றங்களை இவர்களால் உருவாக்க முடியும். குழந்தைத் திருமணப் பிரச்சினை குறித்து உரையாடுவதில் இவர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது. எனவே, குழந்தைத் திருமணத்தினால் விளையக்கூடிய தீங்குகள் குறித்த தகவல்களை இவர்களுக்கு அளித்து அவர்களையும் இப்பணியில் ஈடுபடச்செய்வது மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. மேலும், இந்தச் சிக்கலான விஷயம் குறித்து அவர்களின் திறனை மேம்படுத்துவதால், குழந்தைத் திருமணப் பிரச்சினைக்கு ஒரு நிலையான, நீடித்த தன்மையுள்ள தீர்வை உருவாக்க முடியும். முன்னணிக் களப்பணியாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள **இந்தக்கையேட்டின் குறிக்கோள்:**

- மனித உரிமைகள் குறித்து ஆழமான புரிதலையும், அது எவ்வாறு குழந்தைத் திருமணப் பிரச்சினைகளோடு தொடர்புடையதாக உள்ளது என்பதையும் தெளிவுபடுத்துதல். பாலின வரையறை செயல்பாடுகள் பெண்களின் உரிமை மீறல்களுக்கு இட்டுச் செல்வதுடன், ஆண் பெண் இருபாலினத்தவர்களும் தங்களுடைய முழுத்திறனை அடைவதற்கும் தடைக்கல்லாக இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

- குழந்தைத் திருமணம் அதிகமாக நடைபெறுவற்கான காரணங்கள் குறித்து விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். பெண்களின் பணிகளாக இச்சமூகம் வரையறுத்திருக்கும் விஷயங்களுக்கும் நமது குடும்பங்கள் சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு திருமணம் செய்ய முயல்வதற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை பங்கேற்பாளர்கள் அலசி ஆராய இயலும். இந்தப்புரிதலோடு, சமுதாய மக்களின் மனநிலையை மாற்றுவதற்கு ஏற்ப குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கருத்துகளைப் பங்கேற்பாளர்கள் தயார் செய்து கொள்ள இயலும்.

- பங்கேற்பாளர்கள், தங்கள் சமூகத்தில் நிலவும் குழந்தைதத் திருமணப் பிரச்சினை தொடர்பாக காவல் துறை பஞ்சாயத்து உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் போன்றவர்களை எவ்வாறு அணுகலாம் இந்தத் தீய நடைமுறைக்கு எதிராக எவ்வாறு குரல் கொடுக்கலாம் – என்பது போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள, தகுந்த செயல் திட்டம் ஒன்றினைத் தயாரிக்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

- வளரிளம் பருவ சிறுவர் சிறுமியருக்குப் பயிற்சி அளிப்பதற்கான கையேடுகளின் ஒரு பகுதியாக இந்தக் கையேடு, உள்ளது. மதத்தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், பெற்றோர்கள் போன்ற பங்காளர்களுக்கு குழந்தைத் திருமணத்தை கட்டுப்படுத்துவதற்கான ஒரு பகுதியாகவும் இப்பயிற்சிக்கையேடு உள்ளது.

## முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு தயாரிக்கும் போது, என்னென்ன காரணிகள் கருத்தில் கொள்ளப்பட்டன?

முன்னணிக் களப் பணியாளர்களின் பிரச்சினைகள் மற்றும் அதனைக் கையாள அவர்களுக்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதன் மூலம், அவர்கள் சமுதாய மக்களோடு இணைந்து, குழந்தைத் திருமணப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் திறம்பட பணியாற்றிட முடியும் என்று **யுனிசெஃப், பிரேக் த்ரு** அமைப்புகளின் சார்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு அறிக்கையின் கருத்துகள் மீது **யுனி செஃப், பிரேக் த்ரு** அமைப்புகளின் வல்லுநர்களிடமும் விவாதிக்கப்பட்டது.

இந்தக் கையேடு தயாரிக்கும் போது, கீழ்க்காணும் முக்கியமான பிரச்சினைகள் குறித்தும் அதனைக் கையாள, முன்னணிக் களப் பணியாளார்களுக்குத் தேவைப்படும் திறன் மேம்பாடு குறித்தும் கருத்தில் கொள்ளப்பட்டன. அதே போல் கட்டாயத் திருமணத்திற்கு தள்ளப்பட இளவயது ஆண் பெண் ஆகிய இருபாலரும் சந்திக்கக்கூடிய பிரச்சனைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன:

### வளரிளம் பெண்கள்: -

- 13 - 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பெண்கள், இளம்வயதிலேயே திருமணம், அதைத்தொடர்ந்து, குடும்ப வன்முறை மற்றும் பாலியல் வன்முறையைக்கு அதிகமாக ஆளாகும் அபாயத்தில் உள்ளனர்.

- அவர்கள், பெரும்பாலும் கிராமப்புறம் அல்லது சிறுநகரங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அந்த வரையறைக்குள் இது நின்று விடுவதில்லை. .

- குறைவான கல்வி வசதிகள் மற்றும் வாழ்க்கை நடத்துவதற்கான வாய்ப்புகள் குறைவான பகுதிகளில் அவர்கள் வசிக்கிறார்கள்.

- *கல்வி மற்றும் வாழ்வாதாரம், தனக்கான வாழ்க்கைத் துணையை தேர்வு செய்தல், குழந்தைப்பேறு, குடும்ப வரவு செலவு கணக்குகளைக் கையாளுதல் போன்ற விஷயங்களில் வரையறைக்கு உட்பட்டே முடிவெடுக்கும் திறன் உள்ளவர்களாகவும் அதிகார மற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.*

- *காலம் காலமாக தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும் பழக்கவழக்கங்களான, குழந்தைத் திருமணம், வரதட்சிணை மற்றும் பாலின பாரபட்சம் ஆகியவற்றிற்கு ஆளாகிறார்கள்.*

- *மகள் / மணமகள் / மனைவி / தாய் – ஆகிய நிலைகளில், பழமையான சமுதாய எதிர்பார்ப்புகளுக்குப் பெண்கள் இணங்க வேண்டிய நிலையே இன்னும் உள்ளது.*

- *அவர்களிடம், சுயமதிப்பு, சுயமரியாதை, தன்னம்பிக்கை ஆகியவை மிகக்குறைவாகவே உள்ளது.*

- *சம மனிதர்களுடன் கலந்து, பேச்சு வார்த்தை நடத்தும் திறன் மிகக்குறைவாகவே உள்ளது.*

## வளரிளம் ஆண்கள் :

- *14 - 20 வயதுப் பையன்களும், இளம் பெண் குழந்தைகளைப் போலவே இளவயது திருமணத்துக்கு ஆளாகும் அபாயத்துக்கு உள்ளாகிறார்கள்.*

- *அவர்கள் வளர்க்கப்படும் சூழ்நிலையில் குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவை அங்கு சாதாரணமாக உள்ளன. இதனால் இது போன்ற பிரச்சினைகளைச் சகித்துக் கொள்ளும் மனப்போக்கு உருவாகிறது.*

- *அவர்கள், பெரும்பாலும் கிராமப்புறம் அல்லது சிறுநகரங்களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தாலும், அதையும் தாண்டி உள்ளனர்.*

- *அவர்கள், அதிலும் குறிப்பாக பெண்கள், கல்வி வசதிகள் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகள் குறைவான பகுதிகளில் வசிக்கிறார்கள்.*

- *அவர்களின், சமூகப் பாலினம் மற்றும் உடற்கூறு பாலினம் குறித்து பாரபட்சமான பார்வை இருப்பதால், பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீது மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ பாலினப் பாகுபாடு காட்டப்படுகிறது.*

- *பழமையான பழக்க வழக்கங்களான குழந்தைத் திருமணம், வரதட்சிணை மற்றும் கருவிலேயே குழந்தையின் பாலினத்தைத் தேர்வு செய்தல் போன்றவைகளுக்கு அவர்கள் ஆளாகிறார்கள்.*

- *மகன் / மணமகன் / கணவன் / தந்தை – ஆகிய நிலைகளில், பழமையான சமுதாய எதிர்பார்ப்புகளுக்கேற்ப அவர்கள் இணங்கவேண்டிய நிலை உள்ளது.*

- *இத்திட்டத்தில் பங்காளர்களாக உள்ள முன்னணி களப்பணியாளர்களுக்கு, குழந்தைத் திருமணம் மற்றும் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு இருந்தாலும் கூட, சிக்கலான இவ்விஷயத்தைப் பற்றி சமுதாய மக்களிடையே பேச, அவர்களுக்கு கல்வி உதவி சாதனங்களும், பேசு கருத்துக்களும் தேவைப்படுகின்றன. மேலும், அவர்களுக்கு ஆணாதிக்கம், குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை மற்றும் உரிமை மீறல்கள் ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கும் நிலை குறித்த முழுமையான புரிதலும் தேவைப்படுகிறது.*

- *பெண்கள், இளைஞர்கள், வளரிளம் பருவப் பெண்கள் மற்றும் ஆண்கள், ஆசிரியர்கள், சமுதாய மற்றும் சமயத் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சேவை வழங்குபவர்கள், உரிய அரசு அலுவலர்கள் மற்றும் சமுதாய சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள் போன்ற பல தரப்பட்ட பங்காளர் குழுக்களுடன் இணைந்து பணிபுரிய வேண்டிய நிலையில் முன்னணிக் களப்பணியாளர்கள் உள்ளனர். குழந்தைத் திருமணம், ஒரு சிக்கலான பிரச்சினை என்பதோடு, பல்வேறு காரணிகளோடும் சார்ந்து இருப்பதால் பலதரப்பட்ட பங்காளர்களின் பிரதிநிதித்துவம் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.*

## முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு தயாரிக்கும் போது, அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் திறன்கள் என்று எவையெல்லாம் அடையாளம் காணப்பட்டன?

*ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்தும் போது கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், குழந்தைத் திருமணப் பிரச்சினை குறித்து பணி செய்யும் நேரத்தில் முன்னணிக் களப்பணியாளர்களுக்குத் தேவையான* ***கீழ்க்காணும் திறன் மேம்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன:***

1. *பாலினம் மற்றும் பாலினப் பாகுபாடுகள் பற்றி புரிந்து கொள்ளுதல்.*
2. *குழந்தைத் திருமணம் மூலம் மீறப்படும் மனித உரிமைகள்.*
3. *பெண் குழந்தைக்கு மதிப்பளித்தல்.*
4. *குழந்தைத் திருமண முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பல்வேறு பங்காளர்களுடன் இணைந்து பணிபுரிதல்.*

## முன்னணிக் களப் பணியாளர்களின் பயிற்சிக்கான கால அளவு மற்றும் பயிற்சி வழங்கும் முறை எப்படி உள்ளது?

முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சிக் கையேடு, மொத்தம் 12 அமர்வுகளைக் கொண்டு 12 மணிநேர கால அளவில் வழங்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வழக்கமான வகுப்பறை பயிற்சியாக இல்லாமல், முறை சாரா பயிற்சியாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. எளிமையான வழிகளோடு கூடிய பங்கேற்பு முறையில் 20 முதல் 25 பங்கேற்பாளார்களை சிறுகுழுக்களாக அமைத்து பயிற்றுநர் பயிற்சி அளிப்பார். பங்கேற்பு முறை பயிற்சிக்கேற்ப பயிற்சித் திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கென, உண்மை நிகழ்வுகள், குழு விவாதம் மற்றும் குழு அறிக்கைகளின் பகிர்வு, குழு உறுப்பினர்களின் சிந்தனைத் தூண்டல், பங்கேற்று நடித்தல் ஆகிய பயிற்சி முறைகள் பயன்படுத்தப்படும். ஒலி, ஒளிசாதனப் பயன்பாடு பங்கேற்பாளர்களின் ஆர்வத்தை அதிகரித்து, முழு ஈடுபாட்டுடன் பயிற்சியைக் கவனிக்க சிறந்த தூண்டு கோலாக இருக்கும். ஒரு சில சமயங்களில், மின்சாதனங்களைப் பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுமாயின், மாற்று ஏற்பாடாக பட்டியலிடப்பட்ட சில விளையாட்டுக்கள், செயல்பாடுகள் நடத்தப்பட வேண்டும் .

உள்ளூர் பங்கேற்பாளார்களான, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த பயிற்றுநர்கள், தங்கள் பகுதியின், சமூக, அரசியல், மற்றும் பொருளாதார நிலை அவற்றின் களப்பிரச்சினைகள் ஆகியவை குறித்து நன்கு அறிந்திருப்பதோடு அதில் தலையிட்டு இதர பிரச்சினைகளான, குழந்தைத் திருமணம் மற்றும் பாலின ரீதியான வன்முறைகளுக்குத் தீர்வு காணக்கூடிய இடையீட்டு நடவடிக்கைகளில் இயல்பாகவே ஈடுபடுவர்.

## முன்னணிக் களப் பணியாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள் எப்படி நடத்தப்பட வேண்டும்?

கீழ்க்காணும் எளிமையான படி நிலைகளின் படி, பயிற்சிக் கையேட்டின் அமர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

- ☐ பயிற்சித் திட்டத்தின் படி, நடத்தப்பட வேண்டிய அமர்வினைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு சில அமர்வுகள், முன்னணி வேலைசெய்யும் களப்பணியாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மிக அருமையாக நடத்திட முடியும் (ஏனெனில், குழந்தைத் திருமணம் காரணமாக, பள்ளியிலிருந்து படிப்பை இடையிலேயே விட்டுவிடும் மாணவியரின் விவரத்தை முதலில் தருபவர்கள் அவர்கள்தான்). எனினும், இதர பங்காளர்களுக்காக எளிய மாற்றங்களுடன் இந்த அமர்வுகளைச் சிறப்பாக நடத்த முடியும்.

- பயிற்சித் திட்டத்தின் நோக்கங்களைக் கவனமாக முன்கூட்டியே படித்துப்பார்த்துக் கொள்ளவேண்டும். பயிற்சியை நடத்துவதற்குத் தேவையான கல்வி உபகரணங்களை முன்னதாகவே தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். பயிற்றுநரின் பயிற்சித்தாள் மற்றும் கருத்துத்தாள் (இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளபடி) அகியவற்றை பிரதிகள் எடுத்து வைத்துக் கொள்வது, பயிற்றுநருக்கான குறிப்புகளை புரிந்து கொள்ளுதல் அல்லது அது குறித்த உள்ளூர் தகவல்களையும் சேகரித்து அவ்வப்போது அவற்றை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இது தவிர, பயிற்சியின் குழு செயல்பாடுகளுக்குத் தேவைப்படும் பொருட்களையும் சேகரித்துத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும்.

- அடுத்ததாக, பயிற்சியின் நோக்கம், பயிற்சி நடத்தப்பட வேண்டிய முறை / படிநிலைகள், முக்கிய விவாதப் பொருள், பயிற்றுநருக்கான குறிப்புகள், இவை அனைத்தையும் படித்து நன்கு புரிந்து கொண்டு தன்னை தயார்படுத்திக் கொள்வது மிக மிக அவசியம். இப்பயிற்சிக்கையேடு ஒரு வழிக்காட்டுதல் மட்டுமே. என்பதை நினைவில் கொள்ளவேண்டும், பயிற்சிக்கான கால அளவு, பங்கேற்பாளர்களின் புரிந்து கொள்ளும் நிலை மற்றும் பயிற்சியின் பாடத்தலைப்பு ஆகியவற்றைப் பொறுத்து ஒரு சில மாற்றங்களையும் செய்து கொள்ளலாம்.

- பயிற்சி முறை, படி நிலைகள், விவாதக் குறிப்புகள் போன்றவற்றை பயிற்றுநர் ஒரு சிறு குறிப்பேட்டில் முன்னதாகவே எழுதி தயார் நிலையில் வைத்துக் கொள்ளுதல் மிக அவசியம் என்று மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

- பயிற்சி பெறும் பங்கேற்பாளர்களுக்கான பிரதிகள், குழு செயல்பாட்டிற்குத் தேவைப்படும் பொருள்கள், பயிற்சிக்கான சிறு குறிப்புக் கையேடு ஆகிய அனைத்தையும், ஆசிரியர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் முன்னணிக் களப்பணியாளர்களுக்கு நடத்தப்படும் பயிற்சிகளுக்கு, பயிற்றுநர் எடுத்துச் செல்ல வேண்டும்.

## குழந்தைத் திருமணம் குறித்து சொல்லப்படும் பலவிதமான சொற்றொடர்கள் என்னென்ன?

சாதாரணமாக மூன்று விதமான சொற்றொடர்கள் குழந்தைத் திருமணத்தைக் குறிக்கும் வகையில் சொல்லப்படுகின்றன. - கட்டாயத் திருமணம், இளவயதுத் திருமணம் மற்றும் குழந்தைத் திருமணம்.

குழந்தை உரிமைகள் குறித்த சாசனத்தின் படி (Convention on the Rights of the Child), "18 வயதிற்குட்பட்ட எந்த ஒரு நபரும் சட்டபூர்வமாகக் குழந்தைகளாக" கருதப்படுவர். இந்தியாவைப் பொறுத்தவரை, 18 வயதிற்கு முன்னதாக நடைபெறும் திருமணங்கள் அனைத்துமே குழந்தைத் திருமணம் (Child Marriage) என்றே கருதப்படுகிறது.

***கட்டாயத் திருமணம்*** *(Forced Marriage)****:*** *ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குறித்த 16 (2) வதுபிரிவுடன் தொடர்புடையது. அதாவது, "திருமணம் என்பது மணம் புரியும் இருவரின் சுதந்திரமானமன மொத்த சம்மதத்தின் அடிப்படையில்தான் நிகழவேண்டும்" என்று அந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது. எனவே கட்டாயத் திருமணம் என்பது, யாரேனும் ஒருவர் அல்லது இருவரின் மனமொத்த சம்மதம் இல்லாமல் திருமணம் நிகழ்வது.*

***இளவயதுத் திருமணம்*** *(Early Marriage)****:*** *என்பது- திருமண வயது குறித்து மட்டுமல்லாது, தான் தயாராக இல்லை என்ற நிலையிலும் பிற காரணங்களுக்காக ஒருவருக்கு நடத்தப்படும் திருமணமாகும். ஒரு நபரின் உடல் ரீதியான, உணர்வு ரீதியான, பாலின ரீதியான மற்றும் உள்ளம் மற்றும் சமூக ரீதியான வளர்ச்சி, கல்வி போன்றவை குறித்துக் கருத்தில் கொள்ளாமலும் தனிப்பட்ட விருப்பங்களைக் கேட்டறியாமலும் செய்யப்படுவதை உள்ளடக்கியது இது.*

*``குழந்தைத் திருமணம், இளவயதுத் திருமணம், கட்டாயத் திருமணம் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 25ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்சில் முக்கியத் தீர்மானத்தை நிறைவேற்றியது, அதன்படி, இந்த மூன்று பிரச்சினைகளையும் மனித உரிமைமீறல் மட்டுமல்லாது வன்முறைக்கான பிரச்சாரமாகவும் அடையாளப்படுத்தியுள்ளது. அதுபோலவே, குழந்தைத் திருமணம், இளவயதுத் திருமணம், கட்டாயத் திருமணம் ஆகிய மூன்றையும், தடுத்து நிறுத்திட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் ஒத்த தன்மையுள்ளதை நாம் புரிந்து கொள்ளலாம்.*

*இத்திட்டத்தின்கீழ் கவனம் செலுத்தப்பட்ட வேண்டிய குழுவினராக வளரிளம் பருவத்தினர் (14 முதல் 18 வயதுவரை) உள்ளதால், குழந்தைத் திருமணம் என்ற சொற்றொடரே அனைத்து பதிவுகளிலும் கையேடுகளிலும் (Tool Kit) ஆகியவற்றிலும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது.*

# அமர்வு - 1



## அறிமுகம்,
## அறிமுக விளையாட்டு,
## அடிப்படை விதி முறைகள்

# அறிமுகம், அறிமுக விளையாட்டு, அடிப்படை விதி முறைகள்

**கற்றலின் நோக்கம்:**

*இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள், இயல்பாகவும் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவர்களாகவும், இப்பயிற்சிக்குத் தேவையான அடிப்படை விதி முறைகளை உருவாக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.*

**நேரம் :** *20 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *படவிளக்கக் கையேடு (ஃபிலிப் சார்ட்), மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- *பயிற்றுநர், பங்கேற்பாளர்கள் அனைவரையும் வரவேற்று அமர வைக்க வேண்டும்.*
- *உங்கள் பெயர், உங்கள் குண நலன்களில் உங்களுக்குப் பிடித்த இரண்டினைக் கூற வேண்டும். இப்பயிற்சியின் வாயிலாக என்ன கருத்துக்களை எதிர்பார்க்கிறீர்கள் என்று பயிற்றுநர், பங்கேற்பாளர்களின் "பயிற்சியின் எதிர்பார்ப்புகளை" கேட்க வேண்டும்.*
- *பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரும் இந்தப் பயிற்சியில் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று கூறுவார்கள்.*
- *பயிற்றுநர்,எதிர்பார்ப்புகளோடு, பயிற்சியின் நோக்கத்தையும் கூறி பின் பயிற்சிக்கான அடிப்படை விதிமுறைகளை வகுத்துக் கொள்ளலாம் என்று கூறி பங்கேற்பாளர்கள் கூறும் கருத்துக்களை கரும்பலகையில் எழுத வேண்டும்.*
- *பின்னர், கருத்துத் தாளில் கூறியுள்ள "பரிந்துரைக்கப்படும் அடிப்படை விதிகள்" வரும் வகையில் பங்கேற்பாளர்களுடன் வகுக்க வேண்டும்.*

# கருத்துத் தாள்

## பரிந்துரைக்கப்படும்அடிப்படைவிதிகள் :

### மரியாதை:

பேசுபவர்களின் பேச்சில் முழுகவனம் செலுத்த வேண்டும். கைபேசியின் பயன்பாட்டினைத் தவிர்த்தல் மற்றும் அக்கம் பக்கத்தினரோடு பேச்சுக் கொடுக்காமல் இருத்தல்.

### ரகசியத்தன்மை:

குழுவில் பகிர்ந்து கொள்ளப்படும் விஷயங்கள் இந்தக் குழுவுக்குள்ளேயே இருக்க வேண்டும்.

### வெளிப்படைத்தன்மை :

குழுவில் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருக்கும் அதே நேரத்தில், பிறரைப் பற்றிய சொந்த விஷயங்களை வெளியிடுதல் அது குறித்து விவாதித்தல் (குடும்பத்தினர், அண்டை வீட்டார் மற்றும் நண்பர்கள்) மற்றும் அவர்களின் குடும்ப பிரச்சினைகளைப் பற்றி பேசுதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். சூழ்நிலைகளைப் பற்றி விவாதிக்கும் போது, பொதுவாகப் பேசப்பட வேண்டுமே தவிர, தனிப்பட்ட நபரின் பெயரையோ அல்லது மற்ற அடையாளங்களையோ குறிப்பிடக்கூடாது. எடுத்துக்காட்டாக, “என் நண்பர்கள்...” என்று ஆரம்பித்துப் பேசுதல் கூடாது.

### முன் தீர்மானம் இல்லாத அணுகுமுறை (Non Judgemental approach) :

குழுவில் ஒரு நபர் கூறும் கருத்துக்கள் ஏற்புடையதாக இல்லை என்றால் அவரைப் பற்றிய முன் தீர்மானத்துடன், அவரை மட்டம் தட்டிப் பேசாமல் கருத்துக்கள் பற்றி மட்டுமே பேச வேண்டும் .

### பன்முகத் தன்மை உணர்வு :

குழுவில் இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் ஒரு தனித்தன்மை மற்றும் கலாச்சார பின்னணி இருப்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, பொறுப்பற்ற முறையிலோ உணர்வைக் காயப்படுத்தும் விதத்திலோ பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

### தவிர்க்கும் உரிமை (Right to Pass) :

அமர்வில் கருத்தைப்பகிர்ந்து கொள்ள விரும்பாவிட்டால், அதைச் சொல்லாமல் தவிர்த்து விடலாம்.

### தன் பெயரை வெளிப்படுத்திக் கொள்ளாமை (Anonymity):

தன்னை யார் என்று வெளிப்படுத்திக் கொள்ளாமல் தனது கேள்விகளை (பரிந்துரை அல்லது விமர்சனப் பெட்டியில் போடலாம்.) கேட்கலாம். அனைத்துக் கேள்விகளுக்கும் ஒருங்கிணைப்பாளர் விளக்கமளிப்பார்.

### ஏற்றுக் கொள்ளுதல் (Acceptance):

ஒரு உணர்ச்சிப் பூர்வமான விஷயம் குறித்தோ, சொந்த விஷயங்களைப் பற்றியோ பேச்சு வரும் போது வயதில் பெரியவர் சிறியவர் என்று இல்லாமல் ஒருவருக்கு அது அசௌகரியமாக இருக்கலாம். அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

### நல்ல பொழுதாக்குதல் (Have a Good Time) :

அனைவரும் ஒருவருக்கொருவர் குழுவாக இணைந்து மகிழ்ச்சியுடன் செயல்பட இப்பயிற்சி ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

# அமர்வு - 2



## மனித உரிமைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்

# மனித உரிமைகளைப் பற்றி புரிந்து கொள்ளுதல்

**கற்றலின் நோக்கம்:**

இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள், அடிப்படை மனித உரிமைகள் குறித்தும் கொள்கைகள் குறித்தும் குழந்தைத் திருமணத்திற்கும் மனித உரிமைகளுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றியும் அறிந்து கொள்வார்கள்.

**நேரம் :** 90 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** வெள்ளைப்பலகை, மார்க்கர் பேனாக்கள்,

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாக பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் சார்ட் தாளையும், மார்க்கர் பேனாக்களையும் கொடுக்கவேண்டும்.
- நாம் நமது வாழ்க்கையை, குறிப்பாக வளரிளம் பருவப் பெண்/ஆணாக, கண்ணியமாக வாழ்ந்திட, நமக்குத் தேவையான மனித உரிமைகள் என்னென்ன என்று ஒவ்வொரு குழுவிலும் கலந்துரையாடி பட்டியல் இடச் சொல்லவேண்டும்.
- அவ்வாறு மனித உரிமைகளைப் பட்டியல் இடும் போது, அவற்றிற்கு எதிரே அந்த உரிமைகளை அடைந்திட தேவைப்படும் வாய்ப்புகள் / வசதிகள் ஆகியவற்றையும் சேர்த்தே பட்டியல் இடச் சொல்ல வேண்டும்.
- பட்டியலிடப்பட்ட மனித உரிமைகளை அடைவதை உறுதிப்படுத்திட யார் பொறுப்பானவர் என்றும் அவரை எவ்வாறு அணுகமுடியும் என்பதையும் குறிப்பிடச் சொல்ல வேண்டும்.
- இறுதியில் ஒவ்வொரு குழுவாக பொது அமர்வில் பகிரச் சொல்ல வேண்டும். பயிற்றுநர், பயிற்றுநர் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.
- பயிற்றுநர் கருத்துத் தாளில் கூறியுள்ள செய்திகளையும் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்ட செய்திகளையும் பங்கேற்பாளர்களுக்கு கூறி விளக்கியபின் இந்த அமர்வை முடிக்க வேண்டும்.

### பயிற்றுநர் குறிப்பு

- அனைத்துக் குழுக்களின் பதில்களில் எது பொதுவாக உள்ளது? அனைத்து குழுக்களிலும் பொதுவாக காணப்படும் உரிமை எது? இந்த பொதுத் தன்மை நமது சமூகத்தைப் பற்றி நமக்கு ஏதும் தெரிவிக்கிறதா?
- இந்த மனித உரிமைகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பு உடையதாக இருக்கின்றன?
- இந்த மனித உரிமைகளில் எவையெல்லாம், குறிப்பாக பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் முக்கியமானவையாக உள்ளன? நமது சமுதாயத்தில் உள்ள பெண்களும் பெண் குழந்தைகளும் இவற்றை அடைய முடிந்ததா?
- இளம்வயதில், ஒரு பெண் குழந்தையோ அல்லது ஒரு ஆண் குழந்தையோ, திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தப்படும் போது, எந்தெந்த மனித உரிமைகள் மீறப்படுகின்றன?
- இத்தகைய மனித உரிமை மீறல்கள் நடைபெறும் போது, அதற்கு யாரெல்லாம் பொறுப்பானவர்கள் ஆகிறார்கள்?
- இளம்வயதில், ஒரு பெண் குழந்தைக்கு திருமணம் செய்து வைப்பதை, தடுத்து நிறுத்தி அவர்களை பாதுகாக்கும் பொறுப்பு யாருக்கெல்லாம் உள்ளது?

## கருத்துத் தாள்

உலக அளவிலானவை, பிரிக்க முடியாதவை, ஒன்றுக்கொன்று தொடர்புடையவை இவையே மனித உரிமைகளின் மிக முக்கியமான மூன்று அடிப்படைக் கோட்டுபாடுகளாக உள்ளன.

அனைத்து மனித உரிமைகளும் உலக அளவில் அனைத்து மக்களுக்கும் உரியவை ஆகும். இவை, ஜாதி, இனம், வகுப்பு, பாலினம், உடல் ஊனம், பாலியல் நோக்கு போன்ற பாகுபாடு இன்றி அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானதாகும். இப்படிப்பட்ட உலகளாவிய மனித உரிமைகளை நம் சமுதாயத்திலும் கொண்டு வருவதில் நாம் அனைவரும் முனைப்பாக செயல்பட வேண்டியது மிக அவசியம். இதன் மூலம் தான், அரசாங்கம் சமுதாயம் மற்றும் நாமும் பதில் சொல்லக்கூடிய நிலையில் இருக்க முடியும்.

மனித உரிமைகள் பிரிக்க முடியாதவை. அரசியல் பங்கேற்பு, பேச்சு சுதந்திரம் மற்றும் மதரீதியான வெளிப்பாடுகள் போன்றவை எவ்வளவு முக்கியமாக கருதப்படுகிறதோ அதைப்போலவே, போதுமான உணவு, இருப்பிடம் மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவையும் முக்கியம். மனித உரிமைகளில் எது முன்னுரிமையானது எவையெல்லாம் அதற்கு அடுத்த நிலை என்று பிரித்துப் பார்க்க முடியாது. பிரித்துப் பார்க்கவும் கூடாது.

மனித உரிமைகள், பன்முகத் தன்மையையும் ஒன்றுக்கொன்று தொடர்பு நிலைகளில் இருப்பதையும் பிரதிபலிக்க வேண்டும்.

மனித உரிமை குறித்த அனுபவங்களில் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றால், பாலினம், இனம், பாலியல், வர்க்கம், புவியியல் ரீதியான அமைவிடம், மதம் போன்ற அம்சங்களோடு இணைத்துப் பார்க்கும் போது நமக்குரிய அடையாளங்கள் தெளிவுபடும்.

மனித உரிமைகள் ஒன்றுக் கொன்று தொடர்பு நிலைகளில் இருப்பதை புரிந்து கொள்ள, ஒரு நபருக்கு, அதிகாரமும் உரிமைகளும் கிடைக்கும் அதே நேரத்தில் அவருக்கு மனித உரிமை மீறல்களும் நடக்கலாம். எடுத்துக்காட்டாக, பாலினம் சார்ந்த அதிகாரமும் உரிமைகளும் இருந்த போதிலும் ஏழ்மையான தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மனிதர், அவரது ஜாதி மற்றும் பொருளாதார நிலை காரணமாக உரிமை மீறலுக்கு ஆளாகிறார். தனது பொருளாதார நிலை காரணமாக ஒரு பெண் அதிகாரமிக்கவராக இருந்தாலும்கூட, பாலினம் காரணமாக அந்தப் பெண் வன்முறைக்கு ஆளாகிறாள். மனித உரிமைக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான பங்கேற்பாளராக உருவாவதற்கு நமது உரிமைகள் குறித்தும் அதிகாரம் குறித்தும் நாம் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.

மனித உரிமைகள் என்கிற ஒரு முக்கியமான கோட்பாடு நமது வாழ்க்கையில் நெருக்கமாக இணைந்துள்ளது. இவை வெறும் தத்துவார்த்த கட்டமைப்பாக மட்டுமன்றி

ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் பயன்படத்தக்க வகையில் உள்ளது. நமது பயிற்சியில் இடம் பெறும் அனைத்து உரிமைகளும் அதற்கான சாட்சியங்களே. ஆரோக்கியமான நலவாழ்விற்கான உரிமை, கல்வி உரிமை, கட்டாயப்படுத்தப்படுதல் மற்றும் வன்முறை ஆகியவற்றிலிருந்து விலகிநிற்கும் உரிமை போன்ற பல்வேறு உரிமைகளை உள்ளடக்கிய ஒரு அமைப்பாக மனித உரிமைகள் உள்ளன.

மனித உரிமைகள், ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும் ஒன்றை ஒன்று சார்ந்தவையாகவும் இருக்கின்றன. இந்த சார்புடைய தன்மையால் ஒரு மனித உரிமை மீறப்படும் போது பலவிதமான மனித உரிமை மீறல்கள் நடக்கும் சூழலும் உருவாகலாம். எடுத்துக்காட்டாக, பெண்களுக்கும், சிறுமியருக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்கநலம் குறித்த தகவல்கள் கிடைக்கப் பெறாமையால் அவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு பற்றிய தகவல்களும் கிடைப்பதில்லை. இந்த நிலையில் அவர்களால் திருமணம் மற்றும் மகப்பேறு தொடர்பான முடிவுகளை எப்படித் தானாகவே எடுக்கமுடியும்? ஒரு வளரிளம் பெண்ணுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து வைத்தால் அவளுக்கு அந்த இளம் வயதிலேயே மகப்பேறு தொடர்பான உடல் நல சிக்கல்களும் வரக்கூடிய நிலை உண்டாகும்.

மனித உரிமைகளுக்காகப் பொறுப்பானவர்கள் பலர், அதில் நாம் அனைவரும் உண்டு. மனித உரிமைகளைச் செயல்படுத்தவதில் நாம் அனைவரும் பங்கேற்பாளர்கள். குடும்ப உறுப்பினர்கள், பள்ளி மற்றும் சுகாதார மையங்கள் உள்ளிட்ட அமைப்புகள், அரசாங்கம் போன்றவைகள் இந்தப் பொறுப்புக்குரியவர்கள் பட்டியலில் அடங்கும்.

இளவயது மற்றும் குழந்தைத் திருமணம் என்பது பல்வேறு மனித உரிமை மீறல் செயலாகும். மேலே கூறப்பட்டுள்ளவாறு, ஒரு பெண்ணுக்கு இளம்வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்பட்டால், பல விதமான மனித உரிமைகள் அவளிடமிருந்து பறிக்கப்பட்டு விடுகின்றன. உதாரணமாக, அவள் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்படுகிறது. மிக இளம் வயதிலேயே கர்ப்பம் தரிக்கும் நிலையும் உடல்நிலை பாதிக்கப்படும் நிலைமையும் ஏற்படுகிறது. அதன் காரணமாக கர்ப்ப காலத்திலும் பிரசவநேரத்திலும் மரணம் ஏற்படுவதற்கு அதிகவாய்ப்புகள் ஏற்படுகின்றன.

ஆரோக்கியமான உறவுகள் குறித்து முழுமையாக விழிப்புணர்ச்சி பெறாமல் இருப்பதால், குடும்ப வன்முறையை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இறுதியாக, அவளுடைய ஒப்புதல் இல்லாமல் திருமணம் நடத்தப்படும் போது, கட்டாயத்துக்கு ஆளாவதிலிருந்தும் வன்முறையிலிருந்தும் விடுபடக்கூடிய முடிவை எடுக்கும் உரிமை மீறப்படுகிறது.

# அமர்வு - 3



## சமூகப் பாலினம் மற்றும் உடற்கூறு பாலினம் பற்றி புரிந்து கொள்ளுதல்

# சமூகப் பாலினம் மற்றும் உடற்கூறு பாலினம் பற்றி புரிந்து கொள்ளுதல்

**கற்றலின் நோக்கம் :**

*இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள், சமூகப் பாலினம் மற்றும் உடற்கூறு பாலினம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டையும், ஆண்கள் பெண்களுக்கான பங்கு எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் அதனால் அது குறித்து நாம் கேள்வி எழுப்பலாம் என்பதையும், பாலினப் பங்கு, அதிகாரம் மற்றும் உரிமைகளுக்கு இடையே உள்ள தொடர்பு பற்றியும் புரிந்து கொள்வார்கள்.*

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- *பயிற்றுநர் பயிற்சித் தாளில் கொடுக்கப்பட்டுள்ள பண்புகள் / குணங்களை சிறு சிறு காகிதங்களில் எழுதி, சுருட்டி ஒரு அட்டைப் பெட்டியில் போட வேண்டும்.*
- *பயிற்றுநர் வெள்ளைப்பலகையில் கோடுபோட்டு இரு பாதியாக பிரித்துக் கொண்டு அதில் "ஆணுக்கானதா, பெண்ணுக்கானதா" என்று எழுத வேண்டும்.*
- *பின்னர், பங்கேற்பாளர்களை அழைத்து அட்டைப் பெட்டியில் உள்ள துண்டுச் சீட்டு ஒன்றினை எடுத்து அதில் எழுதியுள்ள பண்புகள் ஆணுக்கானதா, பெண்ணுக்கானதா என்று கூறச் சொல்ல வேண்டும். பங்கேற்பாளர்களும் கூறுவதை பயிற்றுநர் வெள்ளைபலகையில் அதற்கேற்ற இடத்தில் எழுத வேண்டும்.*
- *எல்லாப் பங்கேற்பாளர்களும் எல்லாச் சீட்டையும் எடுத்துக் கூறிய பின், பயிற்றுநர், பயிற்றுநர் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடலைத் துவக்க வேண்டும்.*
- *ஒவ்வொரு கேள்விக்கும் பின்னர் கருத்துத் தாளில் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தும் கலந்துரையாடலில் பங்கேற்பாளர்களுக்கு விளக்கப்பட்டதா என்பதை பயிற்றுநர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.*

***பயிற்றுநர் குறிப்பு :***

- *கொடுக்கப்பட்டுள்ள பண்புகள் / குணங்கள் ஆண் / பெண் இருபாலருக்கும் பொதுவாக உள்ளதா? அல்லது ஒரு சில பண்புகள் முழுமையாக தனிப்பட்ட ஒருபாலருக்கு மட்டுமே பொருத்தமானதாக இருந்ததா?*
- *அவ்வாறு ஏதேனும் இருந்தால் அவை யாவை?*
- *உடற்கூறு ரீதியாக இல்லாமல் பொதுவான பண்புகளாக இருபாலருக்கும் இருக்கும் பண்புகளை ஏன் ஆணுக்கானது, பெண்ணுக்கானது என்று கூறினோம். எது நம்மை அவ்வாறு கூறவைத்தது? (உதாரணம் : வீரம், தாய்மை, நாணம், வெட்கம்)*
- *ஆண்கள் என்றால் இவ்வாறு இருக்க வேண்டும், பெண்கள் இவ்வாறு இருக்க வேண்டும் என்ற சிந்தனைப் போக்கை சமுதாயம், குடும்பம், ஊடகம், பள்ளி, மதம் ஆகியவை நமக்குள் எப்படி உருவாக்க முடிந்தது?*

***பயிற்சித்தாள் :***

**பண்புகள் / குணங்கள்**

வீரம்
அழுகை
தாய்மை
அச்சம், கோபம்
நகைச்சுவை
கர்வம்
நாணம் / வெட்கம்
பிடிவாதம்

சந்தேகப்படுதல்
தாய்ப்பால் ஊட்டுதல்
பொறுமை
சகிப்புத்தன்மை
தியாகம்
கர்ப்பமாதல்
பளு தூக்குதல்

வலிமை
எரிச்சல்
சகிப்புத் தன்மை
உணர்ச்சிவசப்படுதல்
சோகம்
வேகம்
தைரியம்
அன்பு

## கருத்துத் தாள்

ஒவ்வொரு கலாச்சாரமும் ஆண்குழந்தையையும், பெண் குழந்தையையும் வெவ்வேறாக மதிப்பிடுகிறது. வெவ்வேறு பொறுப்புகளை, குணங்களை நிர்ணயிக்கிறது. ஆண், பெண் மீதான இந்த சமூக வரையறைகள் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், கலாச்சாரத்திற்கு கலாச்சாரமும் மாறுபடுகிறது. அந்தச் சமூகத்தில் உள்ள அதிகாரம் வாய்ந்த குழுவால் இது உருவாக்கப்படுகிறது. 'SEX' பற்றியும், 'GENDER' பற்றியும் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்கத் தெரிய வேண்டும். எது இயற்கையாக வந்தது / எது சமூகம் திணித்தது என்பதை புரிந்துக் கொள்ள உடற்கூறு பாலினம் / சமூகப் பாலினம் என்பது பற்றி பிரித்துப் பார்க்க பழக வேண்டும்.

| உடற்கூறு பாலினம் (Sex) | சமூகப் பாலினம் (Gender) |
|---|---|
| இது உடற்கூறு அடிப்படையில் அமைவது. கண்கூடாகத் தெரிகிற உறுப்புகளின் அடிப்படையிலும் அவற்றின் செயல்பாடுகள் (குழந்தை பெறுதல், தாய்ப்பாலூட்டுதல்) அடிப்படையிலும் அமைவது | இது, சமூக கலாச்சார வரையறை. ஆண்மை பெண்மை என்ற பண்புகளை, நடத்தைகளை, பொறுப்புகளைச் சார்ந்து அமைவது. |
| இது இயற்கையாக உருவானது | மனிதன் உருவாக்கிய சமூக - கலாச்சாரப்பிரிவினை |
| இதை மாற்ற முடியாது. (தற்பொழுது ஆப்ரேஷன் செய்து மாற்றுவது அபூர்வமாக நடக்கிறது) | இது, மாறக் கூடியது. காலத்திற்குக் காலம், கலாச்சாரத்திற்குக் கலாச்சாரம் ஏன் குடும்பத்திலிருந்து குடும்பத்திற்கு வேறுபடுவது இது. மாற்றக் கூடியது. |

சமுதாயத்தின்அனைத்துப் படிநிலைகளிலும், பாகுபாடு என்பது, மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ நடந்து வருகிறது. சமூகப் பாலினம் மற்றும் பாலியல் என்பதில் மக்களுக்கு உள்ள குழப்பம் தான், பாலினப் பாகுபாடு ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. பாலியல் என்பது, உடற்கூறு ரீதியானது (ஆண், பெண்) ஆனால் பாலினம் என்பது சமூகத்தால் வரையறுக்கப்பட்டது. சமுதாயத்தில் ஆண்கள் எப்படி இருக்க வேண்டும் பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற பண்புக்கூறுகளை, சமுதாயம் தான் நிர்ணயிக்கிறது. பாலினப் பாகுபாடுகள் வருவதற்கு முக்கிய காரணம், சமுதாயம் பெண்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட விதமான நடத்தையை எதிர்பார்ப்பது தான். அதாவது, பெண்கள் தங்கள் குரலை உயர்த்தி பேசக் கூடாது, குறிப்பிட்ட வயதிற்குள் திருமணம் முடித்திருக்க வேண்டும். அவர்களின் கணவன், மாமனார், மாமியார் ஆகியோரைக் கவனித்துக் கொள்ள வேண்டும் போன்ற பல நியதிகளை சமுதாயம் விதிக்கிறது. அதே போல், ஆண்களுக்கு உரத்த குரலும் வலுவான உடலும் இருக்க

வேண்டும். தங்கள் குடும்பத்தை அவர்கள் தான் பாதுகாக்க வேண்டும். அவர்கள் கண்டிப்பாக வேலைக்குப் போய் சம்பாதிக்க வேண்டும் போன்ற நியதிகளையும் சமுதாயம் ஆண்களுக்கு விதிக்கிறது. சமுதாயம் வகுத்துள்ள விதிகளை ஆண்களும் பெண்களும் நடைமுறைப்படுத்தாவிட்டால், அவர்கள் தொல்லைகளையும் வன்முறைகளையும் சந்திக்க நேரிடுகிறது. பாலினப் பாகுபாடு இப்படித் தான் நிகழ ஆரம்பிக்கிறது. ஆண்களுக்கும் பெண்களுக்குமான பண்புக்கூறுகளை இயற்கை நிர்ணயம் செய்யவில்லை. ஆணாகப் பிறப்பதோ பெண்ணாகப் பிறப்பதோ என்பது மட்டுமே, பிறப்பின் மூலமாக இயற்கை நிகழ்த்துகிறது.

ஆண், பெண் இருபாலருக்குமே, சமுதாயம் விதித்துள்ள விதிமுறைகளுக்கு இணங்கியும் அடங்கியும் தங்களுடைய கடமை மற்றும் பொறுப்புகள் குறித்து,நடக்க வேண்டிய மிகப்பெரிய கட்டாயம் உள்ளது. பெண்களைப் பொறுத்தவரை, மகளாகவும் மனைவியாகவும் தாயாகவும் மட்டுமே பார்க்கப்படுகிறார்கள். அவர்களை பணிபுரிபவராகவோ அல்லது வாழ்வாதாரத்துக்காக சம்பாதித்துக் கொடுக்கக் கூடியநிலையில் வைத்துப் பார்ப்பது என்பது மிக அரிதாகவே உள்ளது. ஆண்களைப் பொறுத்தவரை, குடும்பத்திற்காக சம்பாதித்து கொடுப்பதும் வயதான காலத்தில் தன் பெற்றோரை பராமரிப்பதும் தான் அவர்களது கடமையாகப் பார்க்கப்படுகிறது. வரதட்சிணை கொடுக்க வேண்டி இருப்பதால், பெண் குழந்தைகளை பொருளாதார ரீதியில் ஒரு சுமையாகவே கருதுகின்றனர். மேலும் அவர்கள், தங்கள் குடும்பத்தின் கௌரவத்தை சுமப்பவர்களாகவே பார்க்கப்படுகிறார்கள். இவை போன்ற பல காரணங்களால், பெண் குழந்தைகளை இளம் வயதிலேயே, அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே, திருமணம் முடித்து அனுப்புவதிலேயே கவனமாக இருக்கின்றனர். இதுவே ஒரு மனித உரிமை மீறும் செயலாக மாறி விடுகிறது.

பாலியல் என்பது, உடற்கூறு ரீதியானது (ஆண், பெண்) ஆனால் பாலினம் என்பது சமூக ரீதியானது என்ற முக்கியமான வித்தியாசத்தை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். மிக நுட்பமான பாலினப் பாகுபாடுகள் மட்டுமன்றி அதன் மூலம் குடும்பத்திலும், சமூகங்களிலும் சமுதாயத்திலும் நிகழக்கூடிய அதிகாரப் போக்கு குறித்த விழிப்புணர்வுடன் இருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பாலினம் காரணமாக, நமக்கு விதிக்கப்படும் பங்குகளும் எதிர்பார்ப்புகளும் நம் உரிமைகளை அனுபவிப்பதில் பாதிப்பு ஏற்படுத்தும். உதாரணமாக, குடும்பத்தில், ஆண்கள் எடுக்கும் முடிவுகளின் மீது கேள்விகள் ஏதும் கேட்கக்கூடாது என்ற கலாச்சாரத்தில் உள்ள குடும்பத்துப் பெண்கள், வன்முறை நடக்கும் போது அமைதியாக இருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதன் காரணமாக, வன்முறையில்லாத வாழ்க்கையை வாழும் உரிமையை இழந்துவிடுகிறார்கள்.

# அமர்வு - 4



## சமூகப் பாலினம் மற்றும் தெரிவு செய்தல்

# சமூகப் பாலினம் மற்றும் தெரிவு செய்தல்

**கற்றலின் நோக்கம் :**

இந்த அமர்வின் இறுதியில், பெண்கள் தங்களது விருப்பத்தைத் தெரிவு செய்வதற்கான விவாதத்தை ஏற்படுத்த ஊடகத்தைப் பயன்படுத்த பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.

**நேரம் :** 45 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள்

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் பயிற்சித் தாளில் கொடுக்கப்பட்டுள்ள ஒரு சூழலைக் கொடுக்க வேண்டும்.

- அந்தச் சூழலை வைத்து அந்தக் குழுவில் கலந்துரையாடி ஒரு நாடகத்தை வடிவமைத்து நடித்துக் காட்ட வேண்டும் என்று பயிற்றுநர் விளக்க வேண்டும்.

- 15 நிமிடங்களுக்குப் பிறகு பங்கேற்பாளர்கள் நடித்துக் காட்டும் நாடகத்தை வைத்தே பயிற்றுநர் கலந்துரையாடலைத் துவக்க வேண்டும். மேலும் பயிற்றுநர் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்டு கலந்துரையாட வேண்டும். பங்கேற்பாளர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம்கொடுத்து பங்கேற்பு முறையில் பயிற்றுநர் பயிற்சியை நடத்த வேண்டும்.

- பயிற்றுநர், கருத்துத்தாளில் கூறியுள்ள கருத்துக்களை பயிற்சிக்கு முன்னேரே படித்துப் புரிந்து கொண்டு, அக்கருத்துக்கள் அனைத்தும் கலந்துரையாடலில் வரும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### பயிற்றுநர் குறிப்பு :

- இந்திய கலாச்சார சூழ்நிலைகளில் பெண்களால் தங்களுடைய உரிமைகளை பயன்படுத்த முடிகிறதா?

- இந்தியாவில் மத ரீதியாகவும் சமூக பொருளாதார ரீதியாகவும் உள்ள அனைத்து பிரிவினருக்கும் இந்த உரிமைகளை அடைய முடிகிறதா?

- பெண்களுக்கும் சிறுமியருக்கும் தங்கள் விருப்பப்படி முடிவுகள் எடுக்கமுடிகிறதா அல்லது பெற்றோர்/கணவர்/கணவரின் வீட்டார்–ஆகியோர் எடுக்கும் முடிவுகளுக்கே கட்டுப்பட வேண்டிய நிலைமை உள்ளதா?

- அவர்களது விதிமுறைகளை பெண் குழந்தைகள் ஏற்று நடக்காவிட்டால் அவர்களுக்கு என்ன நடக்கும்?

- அப்படியானால் அவர்கள் "கெட்ட பெண்கள்" என்று கருதப்படுவார்களா அல்லது தனியாகவே இருக்க வேண்டிய நிலை வருமா?

- அவர்கள் வேலைக்குச் செல்ல விரும்பினாலோ அல்லது திருமணமே வேண்டாம் என்று விரும்பினாலோ, அவர்கள் மோசமான தாய் / மகள்/ மனைவி என்றே கருதப்படுவார்களா?

- குடும்பத்தில் பெண்கள், குழந்தைப் பேறு மற்றும் திருமண உறவில் தங்களுடைய விருப்பத்தைத் தேர்வு செய்து நடக்க உரிமை இல்லாத நிலையில் அவர்களுக்கு நிகழும் வன்முறையினை எதிர்கொள்ளும் திறனில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

- தங்களுடைய வாழ்க்கையில் விருப்பத்தை தேர்வு செய்து செயல்பட பெண்கள் என்ன செய்யலாம்?

### பயிற்சித்தாள் :

## நாடகத்திற்கான சூழல்கள்

**சூழல் -1 :**

*மகளுக்கு 17 வயது பக்கத்து ஊரில் இருந்து முப்பது வயது ஆணுக்கு பெண் கேட்டு வருகிறார்கள், பெண் மேலே படிக்க வேண்டும் என்று கூறுகிறார். படித்து என்ன ஆகப்போகிறது என்கிறாள் அம்மா.*

**சூழல் -2 :**

*இரண்டு இளம் பெண்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள் பிளஸ்டு முடிந்தவுடன் கல்யாணம்னு வீட்ல சொல்றாங்க, எனக்கு படிக்கணும், வேலை பாக்கணும்னு ஆசை, இரண்டாவது பெண் சொல்கிறாள் நான் கண்டிப்பாக மேலே படிக்க போறேன்.*

**சூழல் -3 :**

*கல்யாணத்திற்குப் பிறகு வேலை பார்க்கக் கூடாதுன்னு சொன்னா எப்படிப்பா என்கிறாள் மகள், அப்பா சமாதானம் செய்ய முற்படுகிறார், மகள் அவள் வேலை பார்ப்பதை ஒத்துக் கொள்ளுபவரைத் தான் திருமணம் செய்வேன் என்கிறாள்.*

**சூழல் -4 :**

*நல்லவேளை கிடைத்ததால் குமார் மறுத்தும் கேட்காமல் 24 வயதிலேயே திருமணம் செய்து விடுகின்றனர் பெற்றோர். திருமணமாகி ஐந்து வருடங்களிலேயே இரண்டு குழந்தை களைப் பெற்று விட்ட நிலையில் தன் வருமானத்தில் குடும்பத்தை நடத்த மிகவும் சிரமப்படுகிறான் குமார். மனைவிக்கு குடும்பச் செலவுக்கு பணம் கொடுக்க எறிந்து விழுகிறான்.*

# கருத்துத் தாள்

இளமையில் நாம் வளர்கின்ற காலத்திலிருந்தே நமக்கு, ஆண்களும் பெண்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வரும் செய்திகளே நம் மனதில் இவ்வகையான பாகுபாடுகளை நிலைநிறுத்தி விடுகின்றன. குறிப்பாக, பெண்கள் சுதந்திரமாகத் தங்களுடைய விருப்பங்களைத் தேர்வு செய்து அதன்படி நடப்பதற்கு அதிகாரம் இல்லை என்ற செய்தியை இச்சமுதாயம் தொடர்ந்து பரப்பி வருவதால் பெண்களுக்கு இத்தகைய கட்டுப்பாடான சூழ்நிலையிலிருந்து மீண்டு வருவது என்பது மிகக்கடினமாகவே உள்ளது. எப்போது பெண்கள் இதனை எதிர்க்கிறார்களோ அப்போது அதிகமான கட்டுப்பாடுகளையும் வன்முறைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. இது அனைத்து வர்க்கப் பெண்களுக்கும் பொதுவாகவே நிகழ்கிறது. இதில், பணக்கார பெண்களை விட ஏழைப் பெண்கள் தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்று நினைப்பதே ஒரு மாயைதான்.

பணக்காரப் பெண்கள், ஏழைப் பெண்கள் என்ற வித்தியாசமின்றி அனைத்து வகைப் பெண்களுக்கும் தங்களது திருமண விஷயத்தில் சரி அல்லது சரியில்லை என்று சொல்லவே வாய்ப்பு கிடைப்பதில்லை. அதிலும் குறிப்பாக பெற்றோர் இது "சரியான பொருத்தமாக உள்ளது"என்று நினைப்பதால், மணமகன் விஷயத்தில் பெண்களால் மறுத்துப் பேசவே முடிவதில்லை. நமது கலாச்சாரம், பாரம்பரியம் ,சமுதாய வழக்கம் ஆகிய அனைத்துமே பெண்களுக்கு, ஒரு குறிப்பிட்ட வயதிற்குள் திருமணம் செய்தே தீரவேண்டும் என்றே வலியுறுத்தி வருகின்றன. திருமணம் முடிந்ததும், கணவனின் வீட்டைத்தான் அவர்கள் "சொந்தவீடாக"கருத வேண்டும். பெண்கள் தங்களின் கனவு, விருப்பம் , படிப்பு, பணி, அனைத்தையும் தியாகம் செய்தாவது திருமணம் என்ற பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தான் எதிர்பார்க்கப்படுகிறார்கள். பெண்கள் தான் தங்கள் "குடும்பத்தின் கௌரவம்"என்று பார்க்கிறார்கள். எனவே தான் பெண்களுக்கு குறிப்பிட்ட வயதிற்குள் திருமணம் நடைபெறாவிட்டால் அந்த குடும்ப கௌரவம் மங்க ஆரம்பித்து விடும் என்று சமுதாயத்தில் நினைக்கிறார்கள். குடும்ப கௌரவத்தை பாதுகாப்பதற்கு பெண்களின் திருமணம் தான் ஒரேவழி என நினைப்பது தான் குழந்தைத் திருமணத்திற்கு மிக முக்கிய காரணமாகிறது.

ஆண்களுக்கும் இத்தகைய சமுதாய அழுத்தத்தின் காரணமாக சமுதாயம் வகுத்துள்ள பாலின விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகிறது. பொதுவாகவே ஆண்களுக்கு தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துவது பழக்கத்தில் இல்லாத காரணத்தினால், அவர்கள் தங்களுடைய பெற்றோர் மற்றும் வயதில் மூத்தவர்கள் கூறும் கருத்துகளுக்கு எதிராகத் தங்களுடைய கருத்துகள் மற்றும் உணர்வு பூர்வமான தேவைகளைத் தெரிவிக்கத் தயங்குகிறார்கள். தங்களது இளம் வயதில் திருமணம் மற்றும்

அதைச் சார்ந்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் இன்னும் தயாராகவில்லை என்று சொல்லக்கூட அவர்களால் முடிவதில்லை . அவ்வாறு அவர்கள் சொன்னால் அது கூட அவர்களது குடும்ப கௌரவத்தை பாதித்துவிடுமோ என்ற பயம் தான் அதற்குக் காரணமாக அமைகிறது.

தேர்வுகள் செய்வது எளிதான காரியமல்ல, பல்வேறு விஷயங்கள் அதில் சேர்ந்திருப்பதால், தேர்வு செய்வது கடினமாகவே இருக்கிறது. உதாரணமாக, ஒரு பெண் தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் பராமரிக்க போதுமான ஊதியம் இல்லாத நிலையில், காதலன்/ துணைவர்/ கணவன் யாராவது ஒருவர் குடும்பச்செலவு, குழந்தைகளின் படிப்பு போன்றவற்றிற்கு பண உதவி செய்ய முன்வரும்போது முறைகேடான தன்னை இழிவாக நடத்தும் உறவில் நீடிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதேபோல், இளவயது ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் குடும்ப உறவினர் மூலமாகவே பாலியல் தொந்தரவுகள் நிகழும்போது அது குறித்த புகாரை ஏற்றுக் கொள்ளாத அல்லது நிராகரித்து விடும் பெற்றோரிடம் கூட தெரிவிக்க இயலாத நிலை ஏற்படக்கூடும். பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அவளது கன்னித்தன்மை குறித்த அவமானமும் பாலியல் கொடுமை குறித்து எந்த விதப் புகாரும் தெரிவிக்கக்கூடாது என்றும் அதை முழுமையாக மறந்துவிட வேண்டும் என்றும் அவளுக்கும் அவளது பெற்றோருக்கும் அச்சுறுத்தல்கள் வரும். இது அப்பெண்ணுக்கு நிகழ்ந்த பாலியல் கொடுமையைவிட மிகப்பெரிய கொடுமையாக இருக்கும்.

# அமர்வு - 5



## மகனின் மதிப்பு மற்றும் மகளின் மதிப்பு

# மகனின் மதிப்பு மற்றும் மகளின் மதிப்பு

**கற்றலின் நோக்கம் :**

இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள், குடும்பத்திலும் சமுதாயத்திலும், மகன்களுக்கும் மகள்களுக்கும் என்ன விதமான மதிப்புகள் அளிக்கப்படுகிறது என்பதை பரிசீலனை செய்யக்கூடிய திறனைப்பற்றி தெளிவாகபுரிந்து கொள்வார்கள்.

**நேரம் :** 45 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள்

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்கள் அனைவரையும், குடும்பம் என்னென்ன காரணங்களுக்காக மகனுக்கு மதிப்பு அளிக்கிறது, என்னென்ன காரணங்களுக்காக மகளுக்கு மதிப்பு அளிக்கிறது என்பதை குறிப்பட்ட சார்ட் தாளில் எழுத வேண்டும் என்று கூறுங்கள்.
- ஒவ்வொரு பங்கேற்பாளரும் கண்டிப்பாக ஒரு காரணத்தை எழுத வேண்டும் என்று கூற வேண்டும்.
- அனைவரும் எழுதிய பின்னர் அனைத்துக் கருத்துக்களையும் சத்தமாக வாசிக்க வேண்டும். பின்னர் கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள சூழல்களை ஒவ்வொன்றாக வாசித்து அதைப் பற்றி 5 நிமிடம் சிந்திக்கச் சொல்லுங்கள்.
- பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு சூழலையும் சிந்தித்துக் கலந்துரையாடும் பொழுது, பயிற்றுநரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு இது போன்ற சூழல்களை நம் அன்றாட வாழ்வில் தினமும் எதிர்கொள்கிறோமா என்று கேட்டு, இவ்வாறு சிறுவயதில் இருந்தே ஆண் குழந்தைகளையும், பெண் குழந்தைகளையும் வெவ்வேறு குணாம்சங்களோடும், பாத்திர வரையறைகளோடும் வளர்க்கப்படுவதைத்தான் **‘சமூகப் பாலினமயமாக்கல்’** (Socialisation) என்கிறோம் என்று கூற வேண்டும்.
- பின்னர் பயிற்றுநர் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்டுக் கலந்துரையாட வேண்டும்.
- பயிற்றுநர் கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் படித்து புரிந்து கொண்டு, கலந்துரையாடலின்போது பங்கேற்பாளர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

### *பயிற்றுநர் குறிப்பு :*

*மகன், மகளை விரும்புவதற்கு கூறப்படும் பொதுவான காரணங்கள் எவை?*

- *எழுதுவதற்கு எது சுலபமாக இருந்தது? மகனா அல்லது மகளா?*
- *மகன் அல்லது மகள் இருவரில் யாருக்கு அதிகமான மதிப்பு அளிக்கப்பட்டது அதற்கான காரணம் என்ன?*
- *அனைத்து சமுதாயங்களிலும் ஒரே மாதிரியான நிலைதான் உள்ளதா? ஏதேனும் வித்தியாசம் இருந்தால் அதற்கான காரணம் என்ன?*
- *பாகுபாடுகள் காரணமாக மகளுக்கும் மகனுக்கும் எந்த விதமான தாக்கம் ஏற்பட்டுள்ளது?*
- *மகளுக்கும் மகனுக்கும் சமமான வாய்ப்புகள் கிடைக்கக் கூடிய சூழலை நம்மால் எப்படி மாற்றியமைக்க முடியும்?*

## *பயிற்சித்தாள் :*

### *சூழல் -1 :*

*தடதடவென்று ஓடிவந்த லலிதாவைப் பார்த்து, பொம்பளப்புள்ளயா லட்சணமா நடந்து வா என்றாள் அம்மா !*

*ஏன் பெண்கள் ஓடக்கூடாதா?*

### *சூழல் - 2 :*

*செல்வி தன் தோழியின் ஆண் குழந்தையின் முதல் பிறந்த நாளுக்கு கார் பொம்மை ஒன்று வாங்கினார். அடுத்தமாதம் வரவிருக்கிற தங்கச்சி மகளின் பிறந்த நாளுக்கு சொப்புசாமான் வாங்கினார். என்னவாகும்? சற்று சிந்தியுங்கள்*

### *சூழல் - 3 :*

*கடைக்காரர் நீலநிற டப்பா மிட்டாய்க்குப் பதில் பிங்க் கலர் டப்பா மிட்டாயைக் கொடுத்தபொழுது, ஆறு வயது சரவணனுக்கு கோபம் வந்தது. நான் என்ன பொண்ணா என்று கடைக்காரரைப் பார்த்து கோபமாகக் கேட்டான்.*

*ஆறுவயது சரவணனுக்கு ஆணுக்கானது இது, பெண்ணுக்கானது இது என்று உணரவைத்தது எது? சற்று சிந்தியுங்கள்.*

**சூழல் -4:**

*பள்ளி ஆசிரியர் ஆண்டுவிழா வேலைகளைப் பகிர்ந்து சொன்னார், ஆண்களை ஸ்டூல் போடச் சொன்னார், ஆண்களை ஸ்டூல் மேலேறி தோரணம் கட்டச் சொன்னார். ஆண்டு விழா வரவேற்புக் குழுவில் நிற்க ஆசைப்பட்ட குமாருக்கு டீச்சர் 'நோ' சொல்லிவிட்டார். குமாருக்கு கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்நதது, பொம்பளப் புள்ள மாதிரி அழுவுற, ஆம்பிளையா லட்சணமா தைரியமா இரு என்று சொன்னார் டீச்சர்.*

*ஏண் பெண்களால் ஸ்டூல் மேலேறி தோரணம் கட்ட முடியாதா? வரவேற்பில் ஆண்கள் நிற்கக் கூடாதா? ஆண் அழுகக் கூடாதா? சற்று சிந்தியுங்கள்.*

# கருத்துத் தாள்

சமூகப் பாலினமும் பாலியலும் என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்ட விஷயங்களில் அளிக்கப்பட்ட கருத்துகளே மீண்டும் இந்த விவாதத்திற்கும் வந்துள்ளதை நம்மால் பார்க்க முடிகிறது. மகன்களும் மகள்களும் எதையெல்லாம் செய்ய முடியும் என்பதுதான், குடும்பம், மகன்களையும் மகள்களையும் ஏன் விரும்புகின்றனர் என்பதற்கான நேரடியான காரணமாக இருக்கிறது. இளமையில் நாம் வளர்க்கின்ற காலத்திலிருந்தே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் என்னென்ன பங்குகள் மற்றும் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டு வரும் செய்திகளே நம் மனதில் இவ்வகையான பாகுபாடுகளை நிலை நிறுத்தி விடுகின்றன. மகன் அல்லது மகளை விரும்புவதற்கும் இதுவே பின்னணிக் காரணமாக அமைந்து விடுகிறது.

### மகனை விரும்புவதற்கான காரணங்களாக :

பெற்றோரின் முதுமைக் காலத்தில் மகன் தான் துணையாக இருந்து கவனித்துக் கொள்வான் என்று காலம் காலமாக நம்பப்படுகிறது.

- மகன் தான் சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்றுவான்.
- மகனுக்குத் தான் குடும்ப சொத்தில் பங்குண்டு.
- மகன்தான் குடும்பத்தின் பெயரை முன்னுக்குக் கொண்டு செல்வான், காப்பாற்றுவான்.

### அதே போல் மகளை விரும்புவதற்கான காரணங்களாக :

- குழந்தைகளைப் பெற்றெடுத்து அடுத்த தலைமுறைக்கு வழிவகுப்பவர்.
- பெண்தான் தங்கள் “குடும்ப கௌரவத்தின் சின்னம்” என்று பார்க்கப்படுகிறார்.
- மகள், தங்கள் பெற்றோர்களுக்கு உணர்வு பூர்வமான உறுதுணையாக இருப்பார்.

பெரும்பாலான குடும்பங்களில், மகளைவிட மகனுக்குத்தான் முன்னுரிமை அளித்து அவனை அக்குடும்பம் விரும்புகிறது. இம்மாதிரியான, மகனுக்கு முன்னுரிமை அளித்து அவனை விரும்புதலும் மகளைத் தவிர்த்தலுக்குமான மனப்பாங்கு தெற்காசியப் பகுதிகளில் பொதுவாகக் காணப்படுகிறது. இந்த அமர்விலும் 3வது அமர்விலும் இது தான் முதன்மைக் காரணமாக தெரிவிக்கப்பட்டது. குடும்பங்களில் தங்கள் மகள்களை பொருளாதார சுதந்திரத்துடன் குடும்பத்தைப் பராமரிப்பவராக பார்ப்பதில்லை. மேலும் தங்களது முதுமைக்காலத்தில் மகள்கள் தங்களைப் பாதுகாத்து பராமரிப்பதை கற்பனை செய்து பார்க்கக்கூட விரும்புவதில்லை. குடும்பங்கள், தங்கள் மகளைக் கூட அடுத்த வீட்டிற்கான சொத்து என்று தான் இன்னமும் சொல்கிறார்கள். வரதட்சிணை அளிக்கும்

பழக்கம் இன்றும் பரவலாக இருப்பதால் பெண் குழந்தைகளை ஒரு சுமையாகவே குடும்பத்தில் நினைக்கின்றனர். இது போன்ற மனப்பாங்கு அதிகமாக இருக்கும் காரணத்தினால், பெண்களுக்கான பாகுபாடுகள் அதிகமாகவும் மகன்களுக்கான சலுகைகள் அதிகமாகவும் குடும்பங்களில் காணப்படுகின்றன.

இம்மாதிரியான மகனை விரும்பும் மனப்பாங்கு சில எதிர்மறையான தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது. அதேபோல, குறைந்து கொண்டே வரும் பாலின விகிதாச்சாரமும் (பஞ்சாப் மற்றும் அரியானாவில் மிக அதிகமாக உள்ளது) இதற்கு ஒரு உதாரணமாகும். இந்தியாவில், கருவிலிருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்று ஸ்கேன் செய்து பார்ப்பது குற்றம் என்று தடைச்சட்டம் இருந்தாலும் இன்னும் சில மருத்துவமனைகளில் அல்ட்ராசவுண்ட் பரிசோதனைகளில் இதைத் தெரிவிக்கும் வழக்கம் இருந்து கொண்டே தான் இருக்கிறது. இதன் காரணமாக கருவிலிருப்பது பெண்குழந்தை என்று தெரிந்தவுடன் அதனைக் கருக்கலைப்பு செய்வதும் நடைபெற்று வருகிறது. பெண் குழந்தைகளை சம்பாரிப்பவராக பார்க்கின்ற நடைமுறை இல்லாத காரணத்தினால் அவர்களின் ஆரம்பக் கல்விப் படிப்பும் நடுநிலைப் பள்ளிப்படிப்பும் நிறுத்தப்பட்டுவிடுகின்றன.

மகனை விரும்பும்போக்கு, குழந்தைத் திருமணத்திலும் தாக்கம் செலுத்துகிறது. குடும்பங்களில் வரதட்சிணைப் பழக்கம் தொடர்ந்து இருந்து வருவதால் மிக இளம் வயதிலேயே குறிப்பாக 18 வயதிற்கு முன்பாகவே பெண் குழந்தைகளின் திருமணத்தை நடத்தி முடித்து விடுகின்றனர். மிக இளம் வயதிலேயே திருமணத்தை நடத்தி விடுவதால் மிகக் குறைந்த வரதட்சிணையைக் கொடுத்து தங்கள் பொறுப்புகளிலிருந்து தப்பித்து விடுவதாக பெற்றோர் நம்புகின்றனர். நமது முதன்மைப் பணியாக, பாலின சமத்துவம் உள்ள ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும் என்பதால், சமுதாயத்தில் இப்போது நிலவிவரும், மகனை மட்டுமே விரும்பும் மனப்பாங்கினை மாற்றுவதற்கு முழுமுயற்சி எடுக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதைப் பற்றி, மக்கள் மனதில் ஒரு மாற்றத்தை கொண்டு வரவேண்டும். நம்முடைய பார்வையை விரிவுபடுத்தி சமூகப் பாலினம் தொடர்பாக சமூகத்தில் நிலவும் சமூக விதிகளைத் தாண்டி அவர்களை யோசிக்க வைக்க வேண்டும்.

# அமர்வு - 6



## குழந்தைத் திருமணம் -
## ஒரு மனித உரிமை மீறல்

# குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல்

**கற்றலின் நோக்கம் :**

இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள், மனித உரிமைகள் கண்ணோட்டத்தில் குழந்தைத் திருமணம் பற்றி அலசி ஆராயவும், அதனை அனுமதிப்பதன் மூலம் எந்தெந்த மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளவும், குழந்தைத் திருமணத்தால் ஒரு பெண் குழந்தையின் வாழ்க்கையில் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை ஆராயவும் போதிய திறன்களைப் பெற்றிருப்பார்கள், தயாராக இருப்பார்கள்.

**நேரம் :** 90 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள்

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்களை நான்கு சிறு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.
- பயிற்சித் தாளில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிச் சம்பவங்களை ஒவ்வொரு குழுவிற்கும் ஒன்றாகக் கொடுக்க வேண்டும்.
- சம்பவங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை குழுவில் அனைவரும் கலந்துரையாடி, பதில் தயார் பண்ண வேண்டும். 30 நிமிடங்கள் விவாதித்த பின்னர் ஒவ்வொரு குழுவும் பொது அமர்வில் பகிர வேண்டும். குழு பகிரும் பொழுது ஒவ்வொரு தலைப்பின் கீழும் என்னென்ன உரிமைகள் மீறப்பட்டுள்ளன? அதனால் ஏற்பட்ட தாக்கங்கள் என்ன? என்று குழுவைப் பகிரச் சொல்ல வேண்டும். மேலும் பயிற்றுநர் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளையும் பயிற்றுநர் கேட்டு கலந்துரையாட வேண்டும்.
- கருத்துத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் பங்கேற்பாளர்களுக்கு விளக்க வேண்டும்.

## பயிற்சித்தாள் :

### மாதிரிச் சம்பவம் - 1:

### குழந்தைத் திருமணம் மற்றும் நலவாழ்வு :

*கிராமத்தில் வசித்து வரும் மீனா ஒரு 15 வயதுச் சிறுமி. அவள் 9ஆம் வகுப்பு படித்து வந்தாள். ஒரு நாள் அவள் வீட்டிற்கு அருகில் வசிக்கும் ஒருவர், தனது மருமகன் முறையில் உள்ள ஒரு பையனுக்கு மீனாவை திருமணம் செய்து வைக்க மீனாவின் தந்தையைப் பார்த்துப் பேச வந்தார். அவர் கூறும் அந்தப் பையன் வெளியூரில் ஒரு செங்கல் சூளையில் வேலை பார்த்து வருவதாகவும், அடிக்கடி வெளி மாநிலங்களுக்குச் செல்வான் என்றும் தெரிவித்தார். மீனாவிற்கு இது மிகவும் தயக்கத்தைக் கொடுத்தது. ஆனாலும் அவளது தந்தை இது மிக நல்லவாய்ப்பு என்று கருதி ஒரு மாதத்திற்குள் இந்தத் திருமணத்தை முடித்து வைத்தார். ஓராண்டு சென்ற பின்னர், தனது 16வது வயதில் மீனா ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அவளது கர்ப்பகாலத்தில் அவளுக்கு முறையான மருத்துவப் பரிசோதனைகளோ ஊட்டச்சத்துள்ள உணவோ கிடைக்கவில்லை. பெரும்பாலான நாட்களில் அவளது கணவன் வெளியூர்களுக்குச் சென்று விடுவான். அவ்வப்போது வீட்டிற்குத் திரும்பி வந்தாலும் அவளின் செலவுகளுக்கு பணம் தருவது கிடையாது. அந்த கர்ப்பகாலம் முழுவதும் அவளுக்கு சிரமமாக இருந்து. அத்துடன், அடிக்கடி நோய் வாய்ப்பட்டாள். இதன் காரணமாக பிறந்த குழந்தையும் மிகவும் எடை குறைவாகவும் ஊட்டச்சத்து பற்றாக்குறையுடனும் இருந்தது.*

*அடுத்த சில மாதங்களில், அடிக்கடி காய்ச்சல், தோலில் தடிப்புகள், அத்துடன், கழுத்தைச் சுற்றி வீக்கமும் இருந்ததால் மிகவும் சோர்வாகவே இருந்தாள். டாக்டரிடம் சென்று அவள் பரிசோதனை செய்தபோது தான் அவளுக்கு எச்.ஐ.வி பாதிப்பு என்று தெரியவந்தது.*

*இந்த விஷயம் தெரிந்ததும், அவளது கணவன் வீட்டார் அவளது நடத்தையில் குற்றம்சாட்டி அவளைக் கைக்குழந்தையுடன் வீட்டை விட்டு துரத்தி விட்டார்கள். இந்த நிலையில் குழந்தையும் அடிக்கடி நோய்வாய்ப்பட்டுக் கொண்டே இருந்தது. அவள் தன் பிறந்த வீட்டிற்கு சென்ற போது அவர்களும் அவளைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.*

**மேற்கூறிய நிகழ்வை உங்கள் குழுவில் விவாதிக்கவேண்டும் :**

- *என்னென்ன உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எப்படி?*
- *இத்தகைய உரிமை மீறல்களால் அந்தப் பெண்ணுக்கு எந்தவிதமான பாதிப்புகள் ஏற்பட்டன?*

### மாதிரிச் சம்பவம் - 2:

### குழந்தைத் திருமணம் மற்றும் விருப்பத் தெரிவு செய்யும் உரிமைகள் :

*ஒரு நகரத்திற்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் ரமா வசித்து வந்தாள். ஒவ்வொரு வருடமும் பள்ளியில் அவள் மிக நன்றாகப் படித்து வந்தாள். அவள் 9ஆம் வகுப்பு பாஸ்*

*செய்ததும், அவளின் அம்மா மறுத்தும்கூட, ரமாவின் தந்தை அவளுக்கு ஒரு கைபேசியை (மொபைல் போன்) பரிசாக அளித்தார்.*

*ரமா ஒரு சில நண்பர்களுடன் ஒரு ஆங்கிலப் பயிற்சி வகுப்பிற்கு சென்று வந்தாள். புதிய போன் கிடைத்த பிறகு, நண்பர்களுடன் அடிக்கடி உரையாடி வந்தாள். நண்பர்களுடன் "சுதந்திரமாகப்" பேசும் போக்கினை அவள் தந்தை விரும்பவில்லை.*

*அவளது பெற்றோர் அவளுக்கு மாப்பிளை பார்க்க ஆரம்பித்துள்ளதை ஒரு நாள் அவள் தெரிந்து கொண்டாள். அவள் உடனே தன் பெற்றோரிடம், தான் தொடர்ந்து படிக்க விரும்புவதாகவும் திருமணம் வேண்டாம் என்றும் கூறினாள். அவளுக்கு வேறு யாருடனோ தொடர்பு இருப்பதாக அவளது தந்தைக்குச் சந்தேகம் வந்து விட்டதால், தான் பார்க்கும் மாப்பிளையையே அவள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்.*

*மறுநாள் பள்ளிக்கு செல்லும் வழியில் தன் நண்பன் பிரதீப்பிடம் தன் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறினாள். அவர்கள் இருவரும் அன்று பள்ளிக்குச் செல்லாமல் ஒரு பூங்காவில் அமர்ந்து இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்துப் பேசினார்கள். அன்று அவள் பிரதீப்புடன் வீடு திரும்பும் போது அவளது தந்தை அவர்களைப் பார்த்துவிட்டார். ரமாவை உடனடியாக வீட்டிற்கு போகும்படி கடுமையாகத் திட்டினார்.*

*அன்று ரமா வீடு திரும்பவில்லை.*

*யாரும் தனது மகளைக் கடத்திச் சென்று இருக்க முடியாது என்றாலும் கூட, தனது மகளைக் கடத்திச் சென்று விட்டார்கள் என்று ரமாவின் தந்தை காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார்.*

*அவளது நண்பன் பிரதீப்பை ரமா திருமணம் செய்து கொண்டு அவனது சகோதரி வீட்டில் இருப்பதாக மறுநாள் அவருக்குத் தெரியவந்தது. ஊரில் செல்வாக்குள்ள மனிதர்களை அழைத்துக் கொண்டு பிரதீப் வீட்டிற்குச் சென்ற அவர், அவனை அடித்து விட்டார். இதன் பிறகாவது, வீட்டிற்கு ரமா திரும்பி விடுவாள் என்று அவர் நினைத்தார். ஆனால் ரமா அப்படி வரவில்லை மாறாக, தான் கடத்தப்படவில்லை என்றும் பிரதீப்பை விரும்பியே திருமணம் செய்து கொண்டேன் என்றும் போலீசாரிடம் கூறிவிட்டாள்.*

**மேற்கூறிய நிகழ்வை உங்கள் குழுவில் விவாதிக்கவேண்டும் :**

- ❑ *என்னென்ன உரிமைகள் எப்படியெல்லாம் மீறப்பட்டுள்ளன?*
- ❑ *இத்தகைய உரிமை மீறல்களால் அப்பெண்ணுக்கு என்ன விதமான பாதிப்புகள் ஏற்பட்டன?*

### மாதிரிச் சம்பவம் - 3

### கல்வி,வேலை மற்றும் குழந்தைத் திருமணம் :

ஸ்ரேயா ஒரு ஏழை குடும்பத்து பெண். குழந்தை பருவத்திலிருந்தே நன்றாக படிக்கக் கூடியவள். அவளுக்கு இரு சகோதரர்கள். இருவரும் பள்ளிக்கு செல்வதுடன், டியூஷன் வகுப்புகளுக்கும் செல்வார்கள்.

ஸ்ரேயா ஒன்பதாம் வகுப்பு படித்த போது, அவளுடைய 15வது வயதில் ஒரு தையல்காரரை திருமணம் செய்து வைக்க அவளுடைய பெற்றோர் நிச்சயம் செய்தார்கள்.

திருமணத்திற்கு பிறகு, தன் படிப்பைத் தொடர விரும்பினாள் ஸ்ரேயா. ஆனால் அனுமதி இல்லை. அடுத்த 3 வருடங்களுக்குள் இரு குழந்தைகளுக்குத் தாயாகிறாள். படிப்படியாக அவளுடைய கணவனின் தொழில் நலிவடைந்தது. கணவனால் அவள் கொடுமைப்படுத்தப்படுகிறாள். அவளே சம்பாதித்து குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று அவளது கணவன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பிக்க அவள் விரும்பினாள். அங்கன் வாடிப் பணியாளர் வேலை காலியாயிருப்பதை தெரிந்து அதற்கு விண்ணப்பித்தாள். ஆனால் அவளுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. அந்த வேலைக்கான தகுதி 10 ஆம் வகுப்பு படித்து முடித்திருக்க வேண்டும் என்று அறிந்தாள்.

**மேற்கூறிய நிகழ்வை உங்கள் குழுவில் விவாதிக்கவேண்டும் :**

- அவளுடைய எந்தெந்த உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டிருக்கிறது?
- அவளுக்கு அதனால் என்ன பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன?
- ஸ்ரேயா 10ஆம் வகுப்புப் படித்து முடித்திருந்தால் அவளுடைய வாழ்க்கை எவ்வாறு மேம்பட்டிருக்கும்?

### மாதிரிச் சம்பவம் - 4

### வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் :

டிசம்பர் மாத காலையில் ட்யூஷன் வகுப்பிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது, தன்னுடைய நெருங்கிய தோழியான மினி முந்தைய நாளில் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாகிவிட்டாள் என்று ராதா கேள்விப்பட்டாள், இது நடந்து ஒரு வாரத்திற்குள் அவளுடைய தந்தை அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். அந்த மாப்பிளை இவளை விட 14 வயது மூத்தவர். அப்போது 15 வயதில் இருந்தும் ராதா, மேலே தொடர்ந்து படித்து விட்டு வேலை பார்த்து சுயமாக வாழ ஆசைப்பட்டாள். அப்போது அவள் அடிப்படை கணினிப் படிப்பைப் படித்துக் கொண்டிருந்தாள். இதைச் சொல்லி தந்தையிடம் தொடர்ந்து படிக்க அனுமதி கேட்டாள். ஆனால், மினியைப் போல் அவளுக்கும் ஏதாவது ஆகிவிட்டால் அவளை யாரும் திருமணம் செய்ய மாட்டார்கள் என்றும் அவருடைய மரியாதையும் பாதிக்கப்பட்டுவிடும் என்று சொல்லியும் அவளது தந்தை மறுத்து விடுகிறார்.

எனவே, ராதா படிப்பை இடையிலேயே விட்டு விட்டுவிட்டாள். அவளுக்குத் திருமணம் செய்விக்கப்படுகிறது. திருமணமான முதல்நாளே, அவள் கருப்பாக இருப்பதாகச் சொல்லி மேலும் 30 ஆயிரம் ரூபாய் வரதட்சணை பெற்றோரிடம் கேட்டு வாங்கி வரும்படி அவளுடைய கணவன் வீட்டார் சொன்னார்கள்.

அனைத்து வீட்டு வேலைகளையும் அவளே செய்ய வேண்டியதிருந்தது. காலையில் அனைவரும் எழுவதற்கு முன்பே படுக்கையிலிருந்து எழுந்து விட வேண்டும். அனைவரும் உறங்க சென்ற பிறகே, அவள் உறங்கச் செல்ல வேண்டும். அவளுக்குப் போதிய உணவும் கொடுக்கப்படுவதில்லை. கூடுதல் வரதட்சணையை வாங்கி வராததற்கு இது தான் தண்டனை என்று கணவன் வீட்டார் கூறினார்கள். அதிக வயது வித்தியாசம் காரணமாக அவளால் தன் கணவரிடம் பேசக்கூட முடியவில்லை. முன்பே செலவுக்கு பணம் கேட்டு அவள் கணவர் தர மறுத்திருந்ததால் வீட்டில் தன் சூழ்நிலையைப் பற்றி கணவனிடம் அவளால் சொல்ல முடியவில்லை. அவள் கணவன் நினைத்த நேரமெல்லாம் அவளுடன் உடல்உறவு வைத்துக் கொள்வது அவளுக்கு சங்கடமாயிருக்கிறது. அவள் என்ன நினைக்கிறாள் அல்லது என்ன விரும்புகிறாள் என்பதைப் பற்றி அவளது கணவன் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

படிப்பை அவள் தொடர வேண்டும் என்று விரும்பினாலும், அது அவசியமானது என்று யாரும் நினைக்கவில்லை. வேலை செய்யும் இடத்தில் தன்னுடன் வேலை பார்க்கும் ஒரு பெண்ணுடன் தனது கணவர் தொடர்பு வைத்திருக்கிறார் என்பது சில மாதங்களில் ராதாவுக்குத் தெரியவந்தது. அவளை அடிப்பதில்லை என்றாலும்கூட, தன்னை ஒரு மனுஷியாக கூட நினைக்கவில்லையே என்று அவள் உணர்கிறாள்.

**மேற்கூறிய நிகழ்வை உங்கள் குழுவில் விவாதிக்கவேண்டும் :**

- அவளுடைய எந்தெந்த உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டுள்ளன?
- அதனால் அவளுக்கு என்ன பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன?

### பயிற்றுநர் குறிப்பு

- ஒவ்வொரு மாதிரிச் சம்பவத்திலும், எந்த விதமான உரிமைகள் மீறப்பட்டுள்ளன?
- இந்த மாதிரிச் சம்பவங்கள் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக உள்ளன?
- உரிமை மீறல்கள் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக உள்ளன?
- ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகளின் வாழ்க்கைத் தரம் குறித்து இந்த மாதிரிச்சம்பவங்கள் நமக்கு தெரிவிக்கும் செய்தி என்ன? அவர்களது குடும்பத்தினரின் வாழ்க்கையை இது எவ்வாறு பாதிக்கிறது?

## கருத்துத் தாள்

குழந்தைத் திருமணம் குறிப்பிட்ட மனித உரிமை மீது எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன என்பதை ஒவ்வொரு மாதிரிச் சம்பவத்தின் துணையுடன் விவாதிக்கவேண்டும். இதற்கு நலவாழ்வு, வேலைவாய்ப்பு, குடும்ப வன்முறை, கல்வி, விருப்பத் தெரிவு செய்யும் உரிமை என்று ஒவ்வொரு மனித உரிமை குறித்தும் மிக ஆழமாக புரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். பட்டியலிடப்பட்டுள்ள பிரச்சினைகள், விவாதத்தின்போது வெளிவரக்கூடும். இதிலுள்ள அனைத்து விவரங்களும் முழுமையாக விவாதிக்கப்பட வேண்டியது மிக அவசியம். கூடுதலாக, நாம் ஏற்கெனவே அமர்வு 2 இல் மனித உரிமைகளைப் புரிந்து கொள்ளுதல் என்ற தலைப்பில் செய்தது போல உரிமைகளுக்கிடையே உள்ள தொடர்பு நிலைகளையும் அறிந்து கொள்ளுதல் மிக அவசியம். உதாரணமாக, ஒரு பெண் தனது கல்வியை பாதியிலேயே விட்டுவிட நேர்ந்தால், ஒரு பொருத்தமான நல்ல வேலையைப் பெறும் தகுதியையும் இழந்து விடுகிறாள். அப்பெண்ணுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை என்றால், அவள் பொருளாதார ரீதியாக அவளது கணவனையே சார்ந்து இருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடுகிறாள். இதனால் குடும்ப வன்முறையை அவள் எதிர்கொள்ள நேரிடும் போது, இப்பொருளாதார சார்புநிலை, அவளுக்கு வன்முறை நிறைந்த அவளது வீட்டை விட்டு வெளியே செல்ல ஒரு மிகப் பெரிய தடையாக இருக்கும். அதேபோல், அவளுக்கு குடும்பக் கட்டுப்பாட்டிற்கான வழிமுறைகள் பற்றி எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை என்றால், எப்போது குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று அவளால் திட்டமிட்டு செயல்படுத்த முடியாமல் போய்விடும். அதன் விளைவாக அவளுக்கு இள வயதிலேயே கர்ப்பம் தரிக்கும் நிலையும் அதனால் அவளது ஆரோக்கியம் மட்டுமல்லாது வாழ்க்கையேகூட ஆபத்து நிறைந்ததாக ஆகிவிடும்.

| கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குழந்தைத் திருமணம் | ஆரோக்கியம் மற்றும் குழந்தைத் திருமணம் | வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் | விருப்பத் தெரிவு செய்வதற்கான உரிமை மற்றும் குழந்தைத் திருமணம் |
|---|---|---|---|
| *மீறப்படும் உரிமைகள்* | | | |
| • கல்வி பெறுவதற்கான உரிமை<br>• வேலை வாய்ப்பிற்கான உரிய உரிமை | • துணையைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை<br>• பாலியல் சுகாதாரம் மற்றும் இனப் பெருக்கம் பற்றி தேர்வு செய்வதற்குரிய உரிமை<br>• சத்துணவு மற்றும் பராமரிப்பிற்கான உரிமை<br>• உடல்நலம், சிகிச்சை மற்றும் பராமரிப்பு பெறுவதற்கான உரிமை<br>• பொருளாதாரப் பாதுகாப்பிற்கான உரிமை<br>• வீட்டைவிட்டு வெளியே சென்று வேலை செய்யவும் சம்பாதிப்பதற்கான உரிமை | • மகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான பெற்றோரின் உரிமை<br>• பாலியல் சுகாதாரம் மற்றும் இனப்பெருக்கம் பற்றி தேர்வு செய்வதற்கான உரிமை<br>• வரதட்சணை கேட்பதை எதிர்ப்பதற்கான உரிமை | • குழந்தைகளுக்கு அவர்கள் கற்ற கல்வியைப் பயன்படுத்துவது எப்படி என்று கற்றுத் தரும் மதிப்பீடுகளுக்கான உரிமை<br>• தெரியாத ஒருவரை திருமணம் செய்துகொள்ள பெண் வற்புறுத்தப்பட்டால் அவை பற்றி முடிவெடுப்பதற்கான உரிமை |

| தாக்கங்கள் | | | |
|---|---|---|---|
| • படிப்பை இடையில் விட்டு விடுதல்<br><br>• மோசமான பொருளாதார சூழல்<br><br>• குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்ள ஏற்படும் கஷ்டங்கள்<br><br>• பெண்ணிற்கும் அவள் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்துக் குறைபாடு<br><br>• பெண் குழந்தையால் எதிர்கொள்ளப்படும் வன்முறை<br><br>• தாய் எதிர்கொள்ளும் வன்முறையினால் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு<br><br>• முழுமையடையாத கல்வியினால் மிகக் குறைந்த வேலை வாய்ப்பு<br><br>• இயலாமை அதிகரிப்பு | • கணவனால் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டாலும் பெண்ணின் மீது குற்றம் சாட்டப்படுதல்<br><br>• மோசமான சுகாதார நிலைமை<br><br>• பெண்ணின் கையில் ஒரு பொருளாதார வளமும் இல்லை<br><br>• மாமனார், மாமியாரால் வீட்டை விட்டு துரத்தப்பட்ட பின் பிறந்த வீட்டிலும் புகலிடம் கிடைக்காத நிலையில் புகலிடம் இல்லாதிருத்தல் | • உடலளவில், மற்றும் மனதளவில் பேரதிர்ச்சியும் வேதனையும் ஏற்படுதல்<br><br>• பாலியல் சுரண்டல் / துன்புறுத்தல்.<br><br>• திருமணமான தம்பதிகளிடையே ஒப்புதல் இல்லாமல் கட்டாயப்படுத்தி பாலியல் உறவு கொள்வது (அதுவும் பாலியல் பலாத்காரமாகவே கருதப்படுகிறது) | • படிப்பை இடையில் விட்டுவிடுதல்<br><br>• எந்த திறனும் கற்கப்படவில்லை<br><br>• பொருளாதார வளங்களைப் பெற குறைந்த அளவே வாய்ப்பு<br><br>• வன்முறைக்கு ஆளாகக் கூடிய பலவீனமான நிலை<br><br>• தன் உடம்பின் மீதும், இனப்பெருக்க சுகாதாரத்தின் மீதும் தனக்கு கட்டுப்பாடில்லாத நிலை<br><br>• பாலின வரையறைகளால் வறுமை சுழற்சியில் மாட்டிக் கொள்ளுதல் |

## பாலினம் சார்ந்த வறுமைச் சுழற்சியில் அடைபட்டுள்ள நிலை

இந்தக் கலந்துரையாடல் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் விவாதங்களையும் கொண்டுவரும். உதாரணமாக, திருமணத்துக்குள் பாலியல் பலாத்காரம் என்ற சொல்லின் மீது பலதரப்பட்ட விமர்சனங்களும், போதிய வளங்கள் இல்லாத நிலை குறித்து பல கருத்துக்களும் முன்வைக்கப்படலாம். பெற்றோர்கள், தங்கள் பெண் குழந்தைகளுக்கு ஒரு

*பாதுகாப்பு அரணாக இல்லாமல் அவர்கள் கஷ்டப்படும் சூழ்நிலைக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்து வரும் பலவிதமான சம்பவங்களும் விவாதிக்கப்படலாம். மொபைல் போன் எப்படியெல்லாம் தங்கள் மகள்களின் சீரழிவிற்கு காரணமாக உள்ளது என்றும் அவர்கள் வீட்டை விட்டு ஓடத் தூண்டுகிறது என்றும் பழிபோடும் கதைகளைக் நாம் கேட்க நேரிடலாம். இவை அனைத்தையும் கேட்கும் போதெல்லாம் நாம் இது மையப் புள்ளியான பெண் குழந்தைகளின் வாழ்வு என்பதை அடிக்கடி வலியுறுத்திச் சுட்டிக்காட்டிக் கொண்டே இருக்க வேண்டும். தொழில்நுட்ப வசதிகளைக் குறை கூறுவதில் பயனில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு அதைப் பற்றிய தகவலையும் விழிப்புணர்வையும் அளித்து அவர்கள் ஆரோக்கியமான முடிவுகள் எடுக்க உதவி செய்ய வேண்டும். அதே நேரத்தில் பெண் குழந்தைகளைக் குடும்பத்தில் ஒரு சுமையாகக் கருதும் மனப்பாங்கினையும் மாற்றிக் கொள்வதன் அவசியத்தையும் எடுத்துக் கூறவேண்டும். பெண் குழந்தைகள் நல்ல உடல் நலத்துடன் நல்ல கல்வியும் பெறும் போது எதையும் எதிர் கொள்ளும் திறனுடன் விளங்குவார்கள். பெற்றோரையும் கவனித்துக் கொள்ள முடியும். மரியாதையும், சமத்துவமும் உள்ள உறவுகள் கிடைக்கும். குடும்ப வன்முறைக்கு ஒரு நியாயமான தீர்வு அவர்களுக்கு கிடைத்திட நாம் வழிவகை செய்து தர வேண்டும்.*

*குழந்தைத் திருமணத்திற்கு ஒரு மறைமுகமான ஆதரவு இருப்பதை நாம் விவாதப் பொருளாகக் கொண்டு வர வேண்டும். பாலியல் பலாத்காரம் மற்றும் பெண்களை பாலியல் ரீதியாக தவறாக பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஒரே தீர்வு இளவயது திருமணம் தான் என்ற தவறான கருத்தை எதிர்த்து நாம் விவாதம் செய்ய வேண்டும். திருமணத்துக்குள் பாலியல் பலாத்காரம் பற்றிய தெளிவான சட்டங்கள் இல்லாத நிலையில் அது எல்லா திருமணங்களிலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. குழந்தைத் திருமணங்களில் இன்னும் அதிகமாக நிகழ்கிறது. மிகமுக்கியமாக, பெண்கள் தங்கள் பாலினம் காரணமாக, (பெண் என்பதால்) எந்த விதமான வன்முறையையும் சந்திக்கின்ற நிலை இல்லாத ஒரு சமுதாயச் சூழலை உருவாக்கிட அனைவரும் ஒன்று சேர்ந்து இப்பணியில் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்.*

*மேற்கண்ட விவாதங்களும் கலந்துரையாடலும் முக்கியமானவை மற்றும் சுவாரஸ்யமாக இருந்தாலும், நாம்* **கீழ்க்காணும் விஷயங்களையும் சேர்த்துப் பேசவேண்டும்:**

*குழந்தைத் திருமணம் ஒருவரின் மனித உரிமைகளை கடிவாளமிட்டு கட்டுப்படுத்தும் செயலாகும்.*

- *மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்தின் (Universal Declaration of Human Rights -UDHR), மிக முக்கியமான உரிமை, கல்விக்கான உரிமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், குழந்தைத் திருமணம், இளம் பெண்களின் கல்வியை முற்றிலுமாகத் தடைசெய்கிறது.*

- உறைவிடப் பள்ளி வசதிகள், சுத்தமான பாதுகாப்பான கழிப்பறை வசதிகள், பள்ளி சென்று வர போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றின் துணையோடு இடை நிலைக் பள்ளிக் கல்வி வரையிலான கல்வி, விளிம்பு நிலை பிரிவுகளைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு கிடைப்பதை உறுதி செய்வது அவர்களுடைய கல்விக்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் குழந்தை திருமணத்தை தடுப்பதற்கும் பெருமளவு வழிவகுக்கும்.

- மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனத்தின் (UDHR) 25-வது பிரிவில் மிக முக்கியமான அடிப்படை உரிமையாக நலவாழ்வு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதுவும் குழந்தைத் திருமணத்தினால் அதிக பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது.

- அந்தப் பிரகடனத்தின் 23-வது பிரிவில் வேலை வாய்ப்புக்கான உரிமை மற்றும் 22-வது பிரிவில் சமூக பாதுகாப்பிற்கான உரிமை ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவையும் குழந்தைத் திருமணத்தினால் அதிக பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளன.

- இளவயது ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும், குடும்ப நிர்வாகம் மற்றும் பொறுப்புகள் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய பக்குவம் இல்லாத காரணத்தினால், அந்தப்பிரகடனத்தின் 16-வது பிரிவில் கூறப்பட்டுள்ள, முழு சுதந்திரத்துடனும் முழு சம்மதத்துடனும். திருமணம் செய்து கொள்ளும் உரிமை, குழந்தைத் திருமணத்தால் தடைசெய்யப்படுகிறது.

- மனித உரிமைகள் பொதுவாகவே ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதாக இருப்பதால், குழந்தைத் திருமணத்தினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மீறல்கள் தவிர, இன்னும் அநேக மனித உரிமைகளும் மீறப்படுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனத்துக்கு ஆதரவாக, 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதி ஐ.நா.சபையில் இந்தியா ஆதரவளித்து வாக்களித்துள்ளதால், இந்தியர்களாகிய நம் அனைவருக்கும் அந்தப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து மனித உரிமைகளையும் அனுபவிக்க முழு உரிமை உள்ளது.

# அமர்வு - 7



## குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள்

# குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள்

**கற்றலின் நோக்கம் :**

இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள், குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள் என்னென்ன என்று சமுதாயத்தால் சொல்லப்படுகிறது என்றும், அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் தெள்ளத் தெளிவாகப் புரிந்துக் கொள்வார்கள்.

**நேரம் :** 60 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** படவிளக்கக் கையேடு (ஃபிலிப் சார்ட்), மார்க்கர் பேனாக்கள்

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாக பிரிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பயிற்சித்தாளில் கொடுக்கப்பட்டுள்ள நாடகச் சூழலை கொடுக்க வேண்டும். அச்சூழலை வைத்து ஒவ்வொரு குழுவும் ஒரு சிறு நாடகத்தை தயார்படுத்தச் செய்ய வேண்டும்.
- அவ்வாறு நாடகம் தயாரிப்பதற்கு பயிற்றுநர் பதினைந்து நிமிடங்கள் கொடுக்க வேண்டும். குழுவில் அனைவரும் பங்கெடுக்க ஊக்கப்படுத்த வேண்டும்.
- பிறகு ஒவ்வொரு குழுவாக பொது அமர்வில் நாடகத்தை நடித்துக் காட்டச் சொல்ல வேண்டும். கீழ்க்காணும் நான்கு குழுக்களும் நடித்து முடிந்த பிறகு கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடலை பயிற்றுநர் தொடங்க வேண்டும்.
- இங்கு நடித்து காட்டப்பட்ட காட்சிகள் பற்றி என்ன உணர்கிறீர்கள்?
- இந்த நாடகங்களில் காட்டப்பட்ட கதாபாத்திரங்கள், திருமணத்திற்கு தயார் நிலையில் உள்ளவரா? அல்லது இல்லையென்றால் ஏன்?
- இந்த நாடகங்கள் மூலம் இளம் பெண்களுக்கு என்ன செய்தி சொல்லப்படுகிறது?
- பயிற்றுநர், பயிற்றுநர் குறிப்பில் உள்ள கேள்விகளையும் கேட்டு கலந்துரையாடி கருத்துத்தாளில் உள்ள கருத்துக்களையும் பங்கேற்பாளர்களுக்கு கூறி இந்த அமர்வை முடிக்க வேண்டும்.

## பயிற்சித்தாள் :

### சூழல் -1 :

சொந்த ஊரில் வேலை கிடைக்காததால் கமலாவின் பெற்றோர் வெளியூர் சென்று வேலைபார்க்கத் தீர்மானிக்கின்றனர். 17 வயது கமலாவிற்கு திருமணம் செய்துவிட்டு ஊருக்குச் செல்ல நினைக்கின்றனர். கமலாவின் பள்ளி ஆசிரியர் திருமணம் வேண்டாம் என்று சொல்கிறார். தாங்கள் ஏன் திருமணம் செய்ய நினைக்கிறோம் என்ற காரணங்களை பள்ளி ஆசிரியரிடம் கூறுகின்றனர் கமலாவின் பெற்றோர்.

### சூழல் -2 :

பாட்டி அப்பாவிடம் பேசிக் கொண்டு இருக்கிறார். 16 வயதான இராணியை 36 வயதுள்ள ஆணுக்கு சொந்தக்காரர் பெண் கேட்டு வருகிறார். முதலில் மறுக்கும் அப்பாவிற்கு பாட்டி என்ன காரணங்கள் சொல்லி சம்மதிக்க வைக்கிறார்.

### சூழல் -3 :

லட்சுமி +2 முடித்தபிறகு மேலே படிக்க ஆசைப்படுகிறாள். வீட்டில் ஒத்துக் கொள்ளவில்லை. அதிகம் படித்தால் மாப்பிள்ளை கிடைப்பது கஷ்டம், வரதட்சணை அதிகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்கின்றனர் பெற்றோர்.

### சூழல் -4:

அம்மாவுக்கும் மகளுக்கும் தொலைக்காட்சியில் வரும் காதல் காட்சிகள், வீட்டை விட்டு ஓடிப் போதல் போன்ற படங்களைப் பற்றிய வாக்குவாதம் நடக்கிறது.

## பயிற்றுநர் குறிப்பு :

- குழந்தைத் திருமணம் ஏன் நடத்தப்படுகிறது?
- தங்கள் பெண் குழந்தைகளை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுப்பதற்காக பெற்றோரும் சமுதாயமும் கூறும் காரணங்கள் என்னென்ன?
- திருமணம் எப்போது செய்யப்பட வேண்டும் என்பதை யார் முடிவு செய்கிறார்?
- திருமணத்திற்கான அடிப்படை விதிகள் யாவை?
- குழந்தைத் திருமணத்தால் இளம் வயதினரின் ஆண் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகளின் வாழ்க்கையில் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன?
- குழந்தைத் திருமணத்தால் எந்தெந்த உரிமைகள் பாதிக்கப்படுகின்றன?

# கருத்துத் தாள்

இந்திய சமுதாயத்தில் குடும்பம் என்பதுதான் அடிப்படைக் கட்டமைப்பாக உள்ளது. திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமான வாழ்க்கை என்று பார்க்கப்படுவதைவிட குடும்பம் என்ற கட்டமைப்பு தொடரப்பட வேண்டியதாகவே பார்க்கப்படுகிறது. பெண் குழந்தை பிறந்ததிலிருந்தே, வளர்த்து ஒருத்தன் கையில் கொடுக்கணும், இன்னொருத்தர் வீட்டுக்குப் போக வேண்டிய பொண்ணு என்றுதான் பார்க்கிறார்கள். பெண்கள் தான் குடும்ப கௌரவத்தின் சின்னம் என்று பார்க்கப்படுவதால் குழந்தைத் திருமணம் தான் அந்த கௌரவத்தைக் காப்பாற்ற ஒரேவழி என்று நினைப்பதும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது. குடும்ப கௌரவம் குறித்த இந்த கருத்து மிக முக்கியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் இதற்குத் தான் அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

ஆணுக்குக் கல்வியும் வேலைவாய்ப்பும் முக்கியமானதாகக் கருதப்படுவது போல் பெண்ணுக்குக் கருதப்படுவதில்லை. பெண்களுக்கு கல்வியினால் எந்தப் பயனும் இல்லை என்ற நம்பிக்கை மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. கிராமப்புறத்தில் மட்டுமல்ல நகர்ப்புறத்திலும் அதிலும் குறிப்பாக ஏழைப் பெண்கள் அதிகமாக வசிக்கும் பகுதியிலும் இது தான் உண்மை நிலையாக உள்ளது.

பெண்களுக்கு வயது கொஞ்சம் அதிகமாகிவிட்டால் அதிக வரதட்சணை கொடுக்க வேண்டியிருக்கும். ஏனெனில் பொதுவாக மாப்பிள்ளை விட்டார் இளவயதுப் பெண்களையே திருமணம் செய்ய நினைக்கிறார்கள். நல்ல பையன் கிடைத்தால் போதும். பையனுக்கு அதிக வயதாகி இருந்தாலும், பெண்ணுக்கு குறைந்த வயதாக இருந்தாலும் திருமணம் செய்துவிடலாம்.

அதுவும் இல்லாமல், பெண்கள் கொஞ்சம் பெரியவர்களாகி விவரம் தெரிந்து வெளியில் நடமாடவும் ஆரம்பித்துவிட்டால் காதல், பாலியல் உறவு போன்ற பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளக்கூடும். யாரையாவது காதலித்து நம் குடும்ப மானத்தைக் கெடுத்துவிடுவாள் என்று பெற்றோர்களுக்கு ஒரு பயமும் உள்ளது. இதுவும் குழந்தைத் திருமணத்திற்கு ஒரு காரணமாகி விடுகிறது. இந்த பயத்தினால் அவள் பருவம் அடைந்ததும் அவளின் படிப்பையும் பாதியிலேயே நிறுத்தி விடுகிறார்கள்.

பெரும்பாலான குடும்பங்களில், தங்களின் பெண் குழந்தைகளை இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு நல்ல வாழ்க்கையும் பிற ஆண்களிடமிருந்து எந்தத்தொல்லையும் வராது என்று தான் நம்புகிறார்கள்.

ஆனால், இப்படியான இளவயது திருமணங்களால், வளரிளம் பருவத்தில் உள்ள ஆண், பெண் இருவருமே பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் இத்தகைய திருமணங்களை பெற்றோர்களே முடிவெடுக்கிறார்கள்.

தான் எந்த மாதிரியான நபரோடு தன் வாழ்க்கையை வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டும் என்பது பற்றி யோசித்து திட்டவட்டமான முடிவுகளை எடுப்பதற்கு முன்பே பெரும்பாலான ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணங்கள் நடந்து முடிந்து விடுகிறது. ஒரு பெண் பருவமடைந்துவிட்டாலே அவள் திருமணத்திற்கு தயாராகி விட்டாள் என்றுதான் இன்னமும் பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள் இதேபோல் ஆண் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டால் அடுத்து அவனுக்குத் திருமணம் செய்து விடலாம் என்று எண்ணுகிறார்கள் .

ஆண், பெண் இருவரும் ஒரு இணையுடன் ஒரே வீட்டில் வாழ்வதற்கான புரிதலைப் பெற்றவுடன் திருமணம் நடந்தால் அவர்களால் அத்திருமணத்தை முதிர்ச்சியோடு கையாளமுடியும், இல்லையென்றால் இருவருக்கும் அன்றாட வாழ்க்கையில் வரக்கூடிய பிரச்சினைகளை சமாளிக்கத் தெரியாமல் ஒருவரோடு ஒருவர் சண்டையிட நேரிடும். இதனால் ஆண் பொருளாதார ரீதியாக பெண்ணை ஒடுக்குவது மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடலாம், பெண்கள் எந்தவிதமான அதிகாரமும் அற்றவர்களாக யாரிடம் போய் எதை சொல்வது என்று தெரியாமல் பயத்துடனே காலத்தைக் கழிக்க நேரிடுகிறது.

பொதுவாக, இளவயது திருமணத்தால் ஆன், பெண் இருவரும் பாதிக்கப்பட்டாலும் பெண்கள் கல்விக்கான உரிமை, வேலை பெறுவதற்கான உரிமை, துணைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை, இனப்பெருக்க உரிமை, சுரண்டல்களுக்கு எதிரான உரிமை, உடல்நலம் மற்றும் சிகிச்சைக்கான உரிமை, பொருளாதார பாதுகாப்பிற்கான உரிமை, என தங்களுக்கான பல்வேறு அடிப்படை உரிமைகளை இழக்கிறார்கள்.

# அமர்வு - 8



## பார்வை மற்றும் யதார்த்தம்

# பார்வை மற்றும் யதார்த்தம்

**கற்றலின் நோக்கம் :**

இந்த அமர்வின் இறுதியில், வளரிளம் பருவ ஆண்களுக்கும், பெண்களுக்கும் திருமணம் குடும்பம் பற்றி சமூகமும் குடும்பங்களும் எப்படி வெவ்வேறு மதிப்பீடுகளை கற்றுத் தருகிறது என்பதை பங்கேற்பாளர்கள் புரிந்துக் கொள்வார்கள். பாலின சமநிலையற்ற உறவுக்கும் வன்முறைக்கும் அது எப்படி அடித்தளமாக உள்ளது என்பதையும் அடையாளம் கண்டு கொள்வார்கள்.

**நேரம் :** 60 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** படவிளக்கக் கையேடு (ஃபிலிப் சார்ட்), மார்க்கர் பேனா க்கள்

**செயல்படுத்தும் விதம் :**

- பயிற்றுர், பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு மாதிரிச் சமப்பவத்தை கொடுத்து காலந்துரையாடச் சொல்லவேண்டும். அதன் கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கும் கலந்துரையாடி பதில் தயார் செய்ய வேண்டும் என்று கூற வேண்டும்.
- 20 நிமிடங்கள் கழித்து ஒவ்வொரு குழுவும் பொது அமர்வில் தங்களுக்கான சம்பவத்தைப் பற்றியும் அதைச் சார்ந்த கேள்விகளுக்கான பதில்களையும் தெரிவிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவும் பகிர்ந்த பின்னர் பயிற்றுனர் பொது அமர்வில், குழுக்கள் பகிர்ந்த கருத்துக்களின் அடிப்படையில் கலந்துரையாடி கருத்துத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் எடுத்துக் கூறி, விளக்க வேண்டும்.

## பயிற்சித்தாள் :

### மாதிரிச் சம்பவம் -1 :

ராதாவும், பாஸ்கரும் 'பிளஸ் டூ' படிக்கும் மாணவர்கள். இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள், ராதாவின் பிறந்தநாளுக்கு பரிசு கொடுக்கும் பொழுது ராதாவிற்கு ஒரு முத்தத்தை கொடுத்துவிட்டு ஓடிவிடுகிறான் பாஸ்கர். இதுபற்றி இருவரும் தனித்தனியே அவர்கள் நண்பர்களிடம் பேசுகிறார்கள். பாஸ்கரனின் நண்பர்கள் முத்தம் கொடுத்தபோது அவள் சும்மா இருந்ததால் அவளுக்கு பிடித்தது என்றுதானே அர்த்தம், நீ கட்டிப்பிடித்திருந்திருக்க வேண்டும் என்கின்றனர். ராதாவின் தோழிகளில் ஒருத்தி, முத்தம் கொடுத்தபோது நீ மவுனமாக இருந்ததால் உனக்குப் பிடித்திருக்கிறது என்று நினைத்து அடுத்தமுறை இன்னும் நெருக்கமாக வருவான், கவனமாக இரு என்று சொல்கிறாள். இன்னொருத்தி நீ எதற்கும் சம்மதிப்பாய் என்ற முடிவுக்கு வருவான் கொஞ்சம் பிகு பண்ணு என்கிறாள், மூன்றாவது தோழி ரொம்ப நெருக்கமாகப் போய் ஏதாவது பிரச்சினையில் போய் மாட்டிக் கொள்ளப் போகிறாய், கவனமாக இரு என்கிறாள்.

### கேள்விகள் :

1. காதல் பற்றியும், பாலின உணர்வுகள், வெளிப்பாடுகள் பற்றியும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள மதிப்பீடுகள் ஒரே மாதிரியாக உள்ளனவா? ஏதேனும் மாற்றங்கள் உள்ளனவா?
2. காதல் உறவுகளில் பாலியல் ரீதியான விழைவுபற்றி கவனமாக இருக்கவேண்டியது ஆணா பெண்ணா? எந்த வயதில் காதலிக்கலாம்? எந்த வயதில் கல்யாணம் செய்யலாம்?

### மாதிரிச் சம்பவம் -2 :

காலேஜ் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு திருமணம் செய்வதில் ஷீலாவிற்கு இஷ்டமே இல்லை, மணமகனின் வயது வேறு அதிகம். ஆனால் அப்பாவும் அம்மாவும், சாதுவான மாப்பிள்ளை, வரதட்சணை கூட வாங்கவில்லை, எல்லாம் உன் நல்லதுக்குத்தான் என்கிறார்கள். முதலிரவில் அவன் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறான். ஷீலாவுக்கு பயமாகவும் அழுகையாகவும் இருக்கிறது. மறுநாள் அம்மாவிடம் சொல்லி அழுகிறாள். இதுக்கு போய் யாராவது அழுவாங்களா, போகப்போகப் பழகிவிடும் என்கிறாள் அம்மா.

### கேள்விகள் :

1. திருமணத்திற்கு முன் ஆணுக்கும் பெண்ணுக்கும் பாலியல் உணர்வுகள், தொடுதல்கள் பற்றி அறிவு தேவையா? இல்லையா?
2. திருமண உறவில் வரும் பாலியல் வன்முறையை நாம் அங்கீகரிப்பதற்கான காரணங்கள் என்ன?

*மாதிரிச் சம்பவம் -3:*

குமாரும் தேவகியும் காதலித்து திருமணம் செய்தவர்கள் இருவருக்குமே வயது இருபத்து இரண்டுக்குள்தான். குடும்பங்கள் ஒப்புக்கொள்ளாததால் ஓடிப்போய் திருமணம் செய்துகொண்டார்கள். இரண்டு வீட்டிலும் அவர்களை ஒதுக்கி விட்டார்கள். முதல் ஆறு மாதம் எல்லாம் நன்றாகத்தான் இருந்தது, ஆனால் காதலித்த காலத்தில் வாங்கித் தந்தது போல் பரிசு பொருட்கள், இப்பொழுது வாங்கித் தரவில்லை என்று தேவகி சண்டை போட்டபோது, காதலித்த போது அமைதியாக இருந்தவள், தற்போது பெரிய சண்டைக்காரி ஆகிவிட்டாள் என்று திரும்ப குமார் சண்டை போடுகிறான். குழந்தை பிறந்தவுடன் வீட்டின் பொருளாதாரத்தை சமாளிக்க மிகவும் தடுமாறுகிறான் குமார்.

**கேள்விகள் :**

1. காதலித்த காலத்திற்கும் திருமணம் செய்து ஒன்றாக வாழும் காலத்திற்கும் என்ன வித்தியாசங்கள் வருகின்றன?

2. திருமணம் செய்வதற்கு முன் ஆணுக்கும் பெண்ணுக்கும், திருமண வாழ்வு, குடும்பம், குழந்தை பெறுவது இவை பற்றி எல்லாம் என்ன தெரிய வேண்டும் ?

*மாதிரிச் சம்பவம் -4 :*

இருபது வயதிற்குள்ளாகவே மாலதி இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து விட்டாள். மருத்துவர் இரண்டாவது குழந்தைக்குப் பிறகு கர்ப்பத்தடை அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லியும் அவள் கணவன் வீட்டார் கேட்கவில்லை, ஆண் வாரிசு வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். மாலதி மூன்றாவது பிரசவத்தின் பொழுது மிகவும் பலவீனமடைந்திருந்ததால் டெலிவரியில் குழந்தையை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. மூன்றாவது குழந்தையின் கர்ப்பம் அவள் உடல் நலத்தை பாதித்து விட்ட்து என்று டாக்டர் மிகவும் வருத்தப்பட்டார்.

**கேள்விகள் :**

1. அடுத்தடுத்து குழந்தை பெறுவது சரியா ?

2. ஏன் அனைவரும் ஆண் குழந்தையே விரும்புகிறார்கள்?

3. பிரசவத்தில் மாலதி இறந்துபோவதற்கான காரணங்கள் என்ன?

## கருத்துத் தாள்:

பாலியல் குறித்து பையன்களுக்கும் சிறுமியருக்கும் அளிக்கப்படும் செய்திகளில் மிகப்பெரிய வித்தியாசங்கள் உள்ளன. சிறுமியருக்கு அளிக்கப்படும் செய்திகளில், பெரும்பாலும் தாம்பத்திய உறவுகளில் எப்போதும் பணிந்து போகவேண்டும், முதல் அசைவு அவளிடமிருந்து வரக்கூடாது, தாம்பத்திய உறவுகளில் எப்போதும் அதிக விருப்பத்தை வெளிக்காட்டக்கூடாது போன்ற அறிவுரைகள் தான் வழங்கப்படும். தாம்பத்திய உறவுகளில் எப்போதும் அதிக விருப்பத்தை வெளிக்காட்டக்கூடாது போன்ற அறிவுரைகள் தான் பெண்களின் விருப்பத்தைக் கட்டுப்பாட்டில் வைக்க சமுதாயம் எடுக்கும் முதல் நடவடிக்கை. இதற்கு நேர்மாறாக, பையன்கள், அதிகாரத்தையும் ஆளுமையையும் வெளிக்காட்ட வேண்டும் என்றும். அவர்கள் தான் பாலியல் ரீதியான செய்கைகளை முதலில் செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்றும், பாலியல் பற்றிய அனைத்து தகவல்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் (விரிவான தகவல் கிடைக்க எந்த வாய்ப்பும் இல்லாத போதும்) இதைப் பற்றிய பேச்சு வரும்போது வெட்கப்படக் கூடாது என்றும் சமுதாயம் எதிர்பார்க்கும்.

தற்போது நடித்துக் காட்டப்பட்ட நாடகப் பகுதியில் கூட, பாலியல் பற்றிய விஷயங்களை இலை மறைவு காய்மறைவாக தெரிவிக்கும்போது கூட பாலியல் செய்கைகள் அனைத்துமே குழந்தைப் பேறுக்காகத் தான் என்பது போன்ற அறிவுரைகளைத்தான் சொல்லுவார்கள். தாம்பத்திய உறவு என்பது சந்தோஷம் அனுபவிக்க என்று ஒரு போதும் சொல்லமாட்டார்கள். அதேபோல் முதல் முறை உறவு கொள்ளும் போது அது எவ்வளவு கஷ்டத்தையும் வலியையையும் தரும் என்று நமக்குக்கூட யாரும் சொல்லித்தரவில்லை. பெரும்பான்மையானவர்களுக்கு, திருமணம் நடக்கும் வரை தாம்பத்திய உறவு பற்றி எதுவுமே தெரிவதில்லை. அவர்கள் அதற்குத் தயாராகவும் இருப்பதில்லை. பாலியல் பற்றிய செய்திகளைப் பற்றி பேசுவது கூட ஒரு தவறான நடத்தையாகவே இன்று வரை பார்க்கப்பட்டு வருகிறது. அதனால் தான் நம் வீட்டு பெரியவர்கள் கூட மறைமுகமாக ஒரு சில வார்த்தைகளில் மட்டுமே அதைப் பற்றி தெரிவிப்பார்கள். ஒளித்து மறைத்து, பழங்கள் விலங்குகள் போன்றவற்றை உதாரணம் காட்டி பேசுவதை விடுத்து அறிவியல் பூர்வமாக, தெளிவாக பாலியல், மனித உடற்கூறு இயல் குறித்த விவரங்களை திருமணத்திற்கு முன்பே வளரிளம் பருவத்தினருக்கு விளக்க வேண்டியது பெரியவர்களின் கடமையாகும்.

இதேபோல, தாம்பத்திய உறவில் கூட வன்முறை இருக்கக்கூடும் என்றும் அதனால் விருப்பமில்லாத நேரத்தில் வேண்டாம், முடியாது போன்ற வார்த்தைகளை தைரியமாக சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லித்தர வேண்டும். குறிப்பாக இளம்பெண்களுக்கு, தாம்பத்திய உறவில் எதாவது அசௌகரியம் ஏற்படும் போது கணவரிடம் வேண்டாம், நிறுத்திக் கொள்ளுங்கள் என்று சொல்ல உரிமை இருக்கிறது என்ற விஷயத்தை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதே சமயத்தில் தனக்கு உடன்பாடு உள்ளது

என்பதையும் கணவரிடம் சொல்வதற்கு எந்த தயக்கமும் தேவையில்லை. அது தவறும் இல்லை என்பதையும் அப்பெண்களுக்கு தைரியம் அளிக்கும் வகையில் சொல்லித்தர வேண்டும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும், திருமணத்திற்குப் பின்னர் குடும்பத்தாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பலதரப்பட்ட அறிவுரைகள் வழங்கப்படும். பெண்கள், தங்கள் மாமனார், மாமியார், நாத்தனாரிடம் பணிவாகவும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும், கணவன் சொல்லும் எதற்கும் எதிர்த்துப் பேசாமல் அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்ப்பார்கள். ஏதேனும் வன்முறை அல்லது தவறாக மற்றவர்கள் நடந்து கொண்டாலும் கூட அவள் அதை பொறுமையாக சகித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில், திருமணமான பின், கணவனின் வீடுதான் அவளுக்கு சொந்தம், அங்குதான் அவள் சாகும் வரை வாழ வேண்டும். ஆண்கள், தங்கள் மனைவியை அடக்கி ஆளவேண்டும் என்றும் அந்த வீட்டிற்கு அவன் தான் தலைவன் என்பதை ஆரம்பத்திலிருந்தே நிலைநாட்ட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுவான். மாறாக, மனைவி சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கும் கணவனை உலகம் பரிகசித்துப் பேசும். இதுபோன்ற பாலினப்பாகுபாடு இருக்கும் நிலையில், கணவன் பேச்சுக்கு மறுப்பு சொன்னால் குடும்ப வன்முறையை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று தன்னுடைய விருப்பங்களை ஒதுக்கிவிட வேண்டிய நிலை பெண்களுக்குநேரிடுகிறது. பலநேரங்களில், தனது தாய் வீட்டிற்கு செல்வதைக்கூட அவளால் சிந்தித்து பார்க்க முடிவதில்லை.

பாரம்பரியமாக பாடப்பட்டு வரும் நாட்டுப்புறபாடல்களில் கூட குழந்தை திருமணம் கூடாது என்ற எந்த கருத்துகளும் இடம் பெறவில்லை. ஆனாலும் தாம்பத்திய உறவு மற்றும் முதல் இரவில் மேற்கொள்ள வேண்டிய சிலவிஷயங்களை மோசமான விவாதங்களாக எழுப்பும் அதேநேரத்தில், தவறான சில செயல்கள் மற்றும் உறவு முறைகளை இது செய்யப்படலாம் அல்லது அனுமதிக்கப்படலாம் என்ற விதத்தில் குறிப்பிட்டு கூறப்படுகின்றன - உதாரணமாக, புதுமணமகளுடன் அவள் கணவனின் சகோதரர்கள் உறவு கொள்ளுதல், இளம் கணவனுக்கு அவர் மனைவியின் சகோதரிகள் திருமண உறவு குறித்துப் பாடம் நடத்தலாம் போன்றவை. இதைத்தவிர பாலியல் குறித்த தகவல்கள் எதுவும் தரப்படுவதில்லை திருமணம் என்பது எதையும் செய்வதற்கு அளிக்கப்படும் உரிமை என்பது மட்டுமே பிரதானமாக உள்ளது.

குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்கான சட்டங்கள் மற்றும் திட்டங்கள் என்ற தகவல் கையேட்டின் பிரதிகளை பங்கேற்பாளர்களுக்கு வழங்கவேண்டும்.

# அமர்வு - 9



# பாலின சார்பு பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள்

# பாலின சார்பு பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள்

**கற்றலின் நோக்கம் :**

இந்த அமர்வின் இறுதியில், பங்கேற்பாளர்கள் இளம் ஆண் மற்றும் இளம் பெண்கள் திருமணத்திற்கு பின் எந்த விதமான பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை பட்டியலிடுவார்கள். மேலும் அவர்கள் வாழ்க்கையில் இந்த பாத்திரங்களும், பொறுப்புகளும் ஏற்படுத்தும் தாக்கங்களையும் விவாதித்துப் புரிந்து கொள்வார்கள்.

**நேரம் :** 45 நிமிடங்கள்

**தேவையான பொருட்கள் :** வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள்,

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைப்பு வீதம் கொடுத்து கலந்துரையாடச் சொல்ல வேண்டும்.
- குழு -1 சமூக ரீதியாக ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்கு பின்பும் உள்ள பங்கையும் பொறுப்புகளையும் பட்டியலிடச் சொல்லவேண்டும். அது போல் குழு -2க்கு பொருளாதார ரீதியாக, குழு -3க்கு பாலியல் ரீதியாக, குழு -4க்கு தனிப்பட்ட ரீதியாக.
- நான்கு குழுக்களுக்கும் 30 நிமிடங்கள் கொடுத்து கலந்துரையாடி சார்ட் அட்டையில் எழுதச் சொல்லவேண்டும்.
- அனைத்துக் குழுக்களும் எழுதிய கருத்துக்களை பொது அமர்வில் பகிர வேண்டும்.
- பயிற்றுநர், நான்கு குழுக்களும் பகிர்ந்த பின்பு கட்டத்தில் உள்ள பயிற்றுநர் குறிப்பில் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடி, கருத்துத் தாளில் உள்ள கருத்துக்களையும் விளக்கிக் கூறி அமர்வை முடிக்க வேண்டும்.

### பயிற்றுநர் குறிப்பு :

- நான்கு குழுக்களும் பகிர்ந்த பட்டியலில் ஒரே மாதிரியான கருத்துக்கள் இருந்தனவா?
- குறிப்பிட்ட பாத்திரங்கள்/பொறுப்புக்களில் யாருக்கு அதிகமான பொறுப்பு உள்ளது?
- பட்டியலிடப்பட்ட கடமைகளையும், பொறுப்புக்களையும் சிறப்பாக நிறைவேற்றிட இளம் ஆண்கள் மற்றும் இளம் பெண்களுக்கு என்ன தேவைப்படுகிறது?
- இளம் ஆண்கள் மற்றும் இளம் பெண்களுக்கு இந்த பெறுப்புகள், கடமைகளை ஏற்றுக் கொள்வதற்கு என்ன தேவைப்படுகிறது?
- இளம் வயதிலேயே திருமணம் செய்து கொள்ளும் வளரிளம் பருவத்தினருக்கு, அவர்களை ஏற்றுக் கொள்ளும் வளரிளம் பருவத்தினருக்கு, அவர்களிடம் ஒட்டிக்கொள்ளும் கடமைகளும் பொறுப்புகளும் எந்த விதமான தாக்கங்களை ஏற்படுத்தும்?

# கருத்துத் தாள்

## *பாலின சார்பு பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள் :*

*திருமணம் என்பது பொறுப்புகள் நிறைந்த ஒன்றாக சமூகத்தில் பார்க்கப்படுகிறது. திருமணம் முடிந்த பிறகு ஆண்களுக்கும் பெண்களுக்கும் அளவிற்கும் அதிகமான சமூக உறவுகளை சந்திக்கும் நிலைமை ஏற்படுவதால், குறிப்பாக, நல்ல மனைவியாகவும் மருமகளாகவும் பொறுப்புடன் செயல்பட, அதிகமான அழுத்தத்திற்கு ஆளாகும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இந்திய கலாச்சாரப்படி, மணமகனின் சொந்தக்காரர்கள் கூட புது மணமகளின் ஒவ்வொரு நடவடிக்கையும் கூர்ந்து கவனித்து தங்களது எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் சொந்தக்கருத்துகளை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். புது மணமகள், கணவனின் குடும்ப உறவுகளைப் புரிந்து கொண்டு நடப்பதற்கு கொஞ்ச காலம் சிரமப்படுவாள். இதற்கும் கூடுதலாக, சமூகமும் அக்கம் பக்கத்தினரும் கூட புதுப் பெண்ணைக் கண்காணித்து, தங்களது கருத்துகளை அவளிடமும் அவளது கணவன் வீட்டாரிடமும் தெரிவித்துக் கொண்டே இருப்பதும் அவளுக்கு அதீதமன அழுத்தத்தை கொடுத்துக் கொண்டே இருக்கும். இந்திய கலாச்சாரப்படி, புதுமணமகள் எப்போதும் அடக்கமாகவும் குரலை உயர்த்தி பேசாமலும் தங்களை நியாயப்படுத்தி பேசாமலும் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறார்கள். வரதட்சிணை எதிர்பார்ப்பும் அவளது திருமண வாழ்க்கையில் வன்முறையையும் புகுத்திவிடுகிறது.*

*இளம் தம்பதிகளுக்கு, மிக இளம் வயதிலேயே, சம்பாதித்து குடும்பத்தை பராமரிக்க வேண்டிய பொறுப்பு வந்து விடுவதால் பொருளாதார ரீதியில் அதிகமான அழுத்தம் ஏற்படுகிறது. வாழ்வாதாரத்திற்குத் தேவையான திறனோ முன்தயாரிப்போ இல்லாத நிலையில் இருக்கின்ற பொருளாதார நிலைமையில் கூடுதலாக பொறுப்புச் சுமையையும் குடும்பம் ஏற்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதனோடு, குழந்தைத் திருமணம் காரணமாக இளம் பெண்கள் தங்களது படிப்பையும் பாதியிலேயே நிறுத்திவிடுவதால் வேலைக்கு செல்வதற்குத் தேவையான திறனும் இல்லாமல் போய் விடுகிறது. பெரும்பான்மையான பெண்களுக்கு, தங்கள் கணவன் வேலை பார்க்கும் நகர்ப்புறப் பகுதியில் தங்களது திருமண வாழ்க்கையைத் துவங்க வேண்டிய கட்டாய சூழலும் ஏற்படுகிறது. தான் பிறந்து வளர்ந்த சூழ்நிலையை விட்டு வேறு ஓர் நகர்ப்புற சூழ்நிலைக்கு தங்களை தயார்படுத்துவதிலும் பெண்களுக்கு சிரமம் ஏற்படுகிறது.*

*ஆண், பெண் இருபாலருக்கும், தாம்பத்திய உறவு குறித்து தெளிவான விவரங்கள் தெரியாத நிலையில், பல விதமான மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். தெரியாத ஒரு விஷயத்தில் – அதாவது தாம்பத்திய உறவில் ஈடுபட ஆழமான பயஉணர்வே பிரதானமாக இருக்கிறது. இதைப் பற்றிப் பேசுவதே தவறு என்று நினைக்கும் கலாச்சாரத்தில் வளர்ந்தவர்களுக்கு, இச்செயல் பயத்தையும் வலியையும் தான் அளிக்கும். அதனால் தான்,*

இந்த உறவின் மூலம் என்ன சந்தோஷம் கிடைக்கும் என்று புரியாமல் இருப்பார்கள். குறிப்பாக பெண்களுக்கு இது பற்றிய ஒரு விவரமும் தெரியாத நிலையில், உறவின் போது, பாலியல் ரீதியான வன்முறை நிகழ்ந்தால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துப் போய் விடுவார்கள். பெற்றோர் மூலம் நிச்சயம் செய்யப்பட்ட திருமணத்தில் கூட மணமகனும் மணமகளும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள அவகாசம் அளிக்கப்படுவதில்லை. பெரும்பாலான திருமணங்களில், திருமணம் முடிந்த அந்த முதல் இரவிலேயே முதல் தாம்பத்திய உறவும் நிகழ்ந்து விட வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. அதனாலேயே அநேகப் பெண்களுக்கு பாலியலில் ஈடுபடுவது ஒருவித பயத்தையே ஏற்படுத்துகிறது.

மேலே கூறப்பட்டுள்ள அனைத்து அழுத்தங்களும், ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கையிலும் ஓர் எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்துகின்றன. கூடுதலாக, திருமணம் செய்யப் போகும் இளம் பருவத்தினருக்கு அது குறித்த ஒரு தகவலை கூட யாருமேபேசவில்லை என்பதால் மணமக்களுக்கு திருமண நிகழ்வு ஒரு பெரிய கொண்டாட்டமாக இருந்தாலும் உள்ளூர எந்த வழியும் இல்லாமல் தாங்கள் மாட்டிக் கொண்டது போலவே உணர்வார்கள். இந்தப் புது உறவு குறித்து யாரிடமும் கலந்து பேச மிகவும் தயங்குவார்கள். கணவன், நாத்தனார், உறவினர், சமுதாய மக்கள் போன்ற ஒருவரிடமும் பேசமுடியாமல் மிகுந்த பதற்றமும் மனக்கலக்கமும் அடைவார்கள். சில இளம் வயதினர் குடும்பத்தைக் கவனித்துக்கொள்ள போதிய பொருளாதார நிலை இல்லாமையாலும் அவதிப்படுவார்கள்.

முக்கியமாக அவர்களின் உடல் நலத்தைப் பற்றிய விழிப்புணர்வும் அக்கறையும் அவர்களுக்குத் தேவை. குறிப்பாக, 18 வயதிற்கு கீழுள்ள பெண்கள், கர்ப்பம் தரிப்பதில் அதிக ஆபத்து உள்ளது. அவர்கள் வளர்ந்து வரும் நேரத்தில் அவர்களின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக இனப்பெருக்க உறுப்புகளின் வளர்ச்சி மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்த எந்த தகவலும் அளிக்கப்படாத நிலையில், திருமணத்தினால் வரக்கூடிய இளவயது தாய்மை நிலை பற்றியோ அல்லது அதனைத் தடுக்ககூடிய வழிமுறைகளோஅல்லது இனப்பெருக்க உறுப்புக்களில் ஏற்படக்கூடிய தொற்று பற்றியோ எதுவுமே அவர்களுக்குத் தெரிவதில்லை. தம்பதிகள் இது குறித்து ஒருவருக்கொருவர் மனம் விட்டுபேசி, உறவின் போது எப்படி இருவரும் சந்தோஷமாக இருக்க முடியும், எப்போது குழந்தை பெற்றுக்கொள்ளலாம், ஹெச்.ஐ.வி என்றால் என்ன போன்ற விஷயங்களைப் பற்றிப் பேசித் தெரிந்து கொள்ளவேண்டும்.

இது போன்ற பல அம்சங்களை திருமணம் தன்னுள்ளே கொண்டுள்ளது என்பதையும் அதிகமான பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிவரும் என்பதால் இது ஒரு சுலபமான உறவு இல்லை என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். இளவயதுத் திருமணம் மிகப்பெரிய சுமைகளை இளம்தம்பதிக்கு அளிக்கும் என்பதே அதன்

மிகப்பெரிய தாக்கமாகும். குறிப்பாக, இளம் பெண்கள் தங்களின் இளம் வயதிலேயே, திடீரென பலவிதமான கடமைகள், பொறுப்புகள், புதிய உறவுகளுடன் வாழ்தல் என இனம் புரியாத கலக்கத்தில் இருப்பதே அவர்களின் வாழ்க்கையின் மீது பற்று இல்லாத நிலையை புகுத்திவிடும்.

இறுதியாக, இன்பமான திருமண வாழ்க்கை ஆண், பெண் இருவருக்கும் உரிய வயதில், இருவரும் திருமண வாழ்க்கைக்கு தாங்கள் தயார் என்று மனப்பூர்வமாக உணரும் போது நடைபெறுதலே சிறந்ததாகும். ஒருவரை ஒருவர் விரும்பி, ஒருவருக்கொருவர் ஆதரவாக, தங்களின் இன்ப துன்பங்களை இருவருமாக சேர்ந்து அனுபவிப்பதே நிறைவான வாழ்க்கையாகும். அதிலும், இருவரும் ஒருவரையொருவர் பரஸ்பர மதிப்புடன் விட்டுக்கொடுத்து அடுத்தவர் கருத்தையும் கேட்டு முடிவுகள் எடுத்து வாழ்தல் மிகச்சிறப்பு. இம்மாதிரியான வாழ்வில் வன்முறை என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

# அமர்வு - 10



## நமது பங்கேற்பு

# நமது பங்கேற்பு பாத்திரங்கள்

**கற்றலின் நோக்கம் :**

*இந்த அமர்வின் இறுதியில், குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னணிக் களப்பணியாளர்களின், குறிப்பாக அங்கன்வாடிப் பணியாளர்களின் பங்கைப் பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்வார்கள். இப்பிரச்சினையை அணுகுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான யுக்திகளை விவாதிப்பார்கள்.*

**நேரம் :** *45 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *படவிளக்கக் கையேடு (ஃபிலிப் சார்ட்), மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- *பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்க வேண்டும். கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மூன்று நிகழ்வுகளையும் ஒவ்வொரு குழுவிற்கு ஒன்றாகக் கொடுக்க வேண்டும்.*
- *குழுவில் கலந்துரையாடி நடிப்பதற்கு தயாராகுவதற்கு 20 நிமிடங்கள் கொடுக்கவேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவாக பொது அமர்வில் நடித்துக் காட்டச் சொல்லவேண்டும்.*
- *நடித்துக் காட்டப்பட்ட சம்பவம் குறித்தும் இதை வேறு வழிகளில் செய்திருக்கலாமா என்பது குறித்தும் விவாதிக்கவேண்டும்.*

**பயிற்றுநர் குறிப்பு :**

- முன்னணிக் களப் பணியாளர்கள், குறிப்பாக குழந்தைத் திருமணத்துக்கு தீர்வு காண்பதில் அங்கன்வாடிப் பணியாளர்களின் பங்கு என்ன?
- குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அங்கன்வாடிப் பணியாளர்களுக்குச் சாதகமாக உள்ள தனித்துவமான அம்சம் எது?
- குழந்தைத் திருமணம் தொடர்பான மனித உரிமை மீறல்கள் குறித்து அங்கன்வாடி மையங்களிலும் பிற அமைப்புகளிலும் அங்கன்வாடிப் பணியாளர்கள் எப்படி கற்பிப்பார்கள்?
- நமது சமுதாயத்தில் மனித உரிமைக் கலாச்சாரத்தை கொண்டு வருவதில் அங்கன்வாடிப் பணியாளர்களின் பங்கு என்ன?

## பயிற்சித்தாள் :

### பங்கேற்று நடித்தல் - ஷேஸியா :

ஷேஸியா ஒரு 15 வயது உற்சாகமான பெண். பிரமாதமாகப் படிக்கும் பெண் இல்லை அவள். ஆனால் மிகவும் அறிவுக் கூர்மையும் புத்திசாலித் தனமும் உடையவள். பள்ளியில் நடக்கும் அனைத்து போட்டிகளிலும், நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பாள். அனைவரும் அவளுடன் இருப்பதை விரும்புவார்கள். ஒரு நாள் வகுப்பறை மிகவும் அமைதியாக இருந்தது. ஆசிரியர் கேட்ட பிறகும், யாரும் எதுவும் சொல்லவில்லை. சிறிது நேரத்திற்கு பிறகு, வகுப்பறையில் ஷேஸியா இல்லாததை ஆசிரியர் கவனித்தார். வேடிக்கையாக, ''எங்கே அந்த கிராம போன்? அவள் இல்லாததால் தான் அனைவரும் மௌனமாக இருக்கிறீர்களா''என்று கேட்டார். .

அனைவர் முகத்திலும் வருத்தம். ஒரு மாணவி எழுந்து ஷேஸியாவிற்கு திருமணம் நடக்கப் போகிறது. இனி மேல் அவள் பள்ளிக்கு வரமாட்டாள் என்று அவள் தந்தை கூறினார் என்றாள்.

- இதிலிருந்து தொடர்ந்து பங்கேற்று நடிக்க வேண்டும். ஒரு முன்னணிக் களப்பணியாளர் இதற்கு என்ன செய்ய வேண்டும்? நீ என்ன நினைக்கிறாய் என்பதை நடித்துக் காட்டவேண்டும்.

### பங்கேற்று நடித்தல் - ஆனந்த் :

ஆனந்த் 19 வயது பையன். ஒரு நாள் புதிய பைக்கில் சமுதாயக்கூடத்திற்கு வருகிறான். அனைவரும் அவனுடைய பளபளப்பான புது பைக்கைச் சுற்றி நின்று

பாராட்டி அதைத் தொட்டுப் பார்க்க ஆசைப்படுகிறார்கள் ஆனந்த் தான் முக்கியமான ஆளாக உணர்கிறான். ஆணாக இருப்பது எவ்வளவு லாபம் என்று சிரித்துக் கொண்டே கூறுகிறான். அவனைச் சுற்றி கிண்டலும் கேலியுமாக இருக்கிறது. ஏனென்றால் நீங்களும் அந்த பைக்கை பராட்டி ஏதாவது கூறிவிட்டு இதை எப்படி வாங்கினாய்? என்று கேட்கவேண்டும். இந்த பைக்கை வாங்கும் அளவுக்கு வசதி இல்லாதது ஆனந்தின் குடும்பம்.''ஆஷா அக்கா, இது ஆரம்பம் தான். எனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. எனது திருமணத்தன்று என்ன நடக்கிறது என்று பாருங்கள்'' என்றான் ஆனந்த்.

இதிலிருந்து தொடர்ந்து பங்கேற்று நடிக்க வேண்டும். ஒரு முன்னணிக் களப்பணியாளர் இதற்கு என்ன செய்ய வேண்டும்? நீ என்ன நினைக்கிறாய் என்பதை நடித்துக் காட்டவேண்டும்.

**பங்கேற்று நடித்தல் - சுனைனா :**

சுனைனாவின் பெற்றோர் மிகவும் அன்பானவர்கள். தங்கள் பெண்ணை மிகவும் நேசித்தார்கள். வளரிளம் பருவத்தினர் சந்திப்பு நிகழ்வுகளிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் அவள் பங்கேற்கவும் ஊக்கப்படுத்தினார்கள். வளரிளம் பருவத்தினர் சந்திப்பு நிகழ்வுகளை நடத்திவரும், முன்னணிக் களப்பணியாளர் ஆஷாவை சந்திக்க சுனைனாவின் பெற்றோர் சென்றனர். அவர்கள் ஆஷாவிடம் மிகவும் கவலையாகத் தென்பட்டனர். .

சுனைனா உயரமாக வளர்ந்து பெரிய பெண்போல இருக்கிறாள் என்றும் அவளுக்குத் திருமணம் செய்து வைத்து மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைக்கும்படி கிராம மக்களும், சொந்தங்களும் எங்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள். சுனைனா மிகவும் சுதந்திரமாக இருப்பதால் அவளைத் தவறான முன்னுதாரணமாகக் கொண்டு, மற்ற பெண்களும் அவளைப் போல மாறிவிடுவார்கள் என்று ஊர்மக்கள் எங்கள் காதுபடக் கூறுகிறார்கள். நீங்கள் தான் எங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று சுனைனாவின் பெற்றோர் கூறினர்.

இதிலிருந்து தொடர்ந்து பங்கேற்று நடிக்க வேண்டும். ஒரு முன்னணிக் களப்பணியாளர் இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாய் என்பதை நடித்துக் காட்டவேண்டும்.

# கருத்துத் தாள்

முன்னணிக் களப் பணியாளர்களுக்கு, சமுதாயத்தில் சிறப்பான நிலையும் மரியாதையும் அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் வலிமையான சமூகப் பணியாளர்களாக பார்க்கப்படுவதால், குழந்தைத்திருமணம் உள்பட இதர மனித உரிமை பிரச்சினைகளுக்கும் தங்களது சமூக நிலையை/அந்தஸ்தை பயன்படுத்தித் தீர்வு காண முடியும்.

முன்னணிக் களப் பணியாளர்களும் அதே இடத்தில் இருப்பதால், அங்கு நடக்கும் குழந்தைத் திருமணம் குறித்து முதலில் அறிந்து கொள்பவர்கள் அவர்களாகத் தான் இருப்பார்கள். முன்னதாகவே கிடைக்கும் இத்தகவல்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட குடும்பத்தினரிடம் குழந்தை திருமணத்தின் தீய விளைவுகள் குறித்து அவர்கள் விளக்கிக் கூறமுடியும். சமுதாயத்தில் அவர்கள் ஒரு மரியாதைக்குரியவர்களாக இருப்பதால் பெண் குழந்தைகளின் பெற்றோர்களை அவர்களது பேச்சை விருப்பத்துடன் கேட்க வைக்கமுடியும்.

இரண்டாவது வழிமுறையாக, வளரிளம் பருவத்தினர் தங்களுக்குத் தாங்களே கற்றுக்கொள்வதன் மூலம் பல பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வை அதிகப்படுத்த முடியும்.

முன்னணிக் களப்பணியாளர்களால், உயர்நிலைப் பள்ளி மாணவர் சேர்க்கை, வளரிளம் பருவ வளர்ச்சி மாற்றங்கள் குறித்து சிறுமியருக்கும் பையன்களுக்கும் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தல், ஆரோக்கியமான உறவுநிலைகள் குறித்த விழிப்புணர்வு தகவல்களை அளித்தல், எந்தவித வன்முறையும் பொறுத்துக் கொள்ள வேண்டிய விஷயமில்லை என்பதையும் வன்முறைக்கு எதிராக பேசும் உரிமை ஒவ்வொருக்கும் உண்டு என்பதையும் உணர்த்துதல், சிறுமியருக்கும் பையன்களுக்கும் உள்ள தயக்கங்களைப் போக்கி தன்னம்பிக்கையுடன் தங்கள் எதிர்கால கனவுகளையும் லட்சியங்களையும் அடைந்திட ஊக்குவித்தல் போன்றவற்றை செய்ய முடியும். இதன் மூலம், பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும், குழந்தைத் திருமண முறையை எதிர்த்துப் போராடத் தேவையான தகவல்களையும் திறன்களையும் பெறுவார்கள்.

இறுதியாக, மனித உரிமைக் கோட்பாடுகளைக் கொண்ட அமைப்புகளை உருவாக்குவதில் முன்னணிக் களப் பணியாளர்கள் முக்கியப் பங்காற்ற முடியும். மனித உரிமைகள் குறித்து தங்களது சகாக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டுவதன் மூலமும், கற்பிக்கும் முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் அனைவருக்குமான மனித உரிமைகளுக்காக அனைவரையும் ஒன்று திரட்டுவதன் மூலமும் மனித உரிமைகளுக்கான அமைப்புகளை கட்டமைப்பதில் முன்னணிக் களப் பணியாளர்கள் உதவ முடியும்.

# அமர்வு - 11



## குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உத்திகளைத் திட்டமிடல்

# குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உத்திகளைத் திட்டமிடல்

**கற்றலின் நோக்கம் :**

*இந்த அமர்வின் இறுதியில், சமூகத்தில் குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உள்ள சவால்களையும், குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பணியாற்றக் கூடிய பங்காளார்களையும், பங்கேற்பாளர்கள் அடையாளம் காண்பார்கள்.*

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- *பயிற்றுநர், பயிற்சித் தாள் - 1ல் கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சம்பவத்தை பொது அமர்வில் வாசிக்க வேண்டும்.*
- *இந்த உண்மைச் சம்பவத்தில் குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவிய பங்காளர் யார்? என்று கேட்டு கலந்துரையாடலைத் தொடங்க வேண்டும். அதற்கு பங்கேற்பாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் என்று கூறுவார்கள்.*
- *பங்கேற்பாளர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.*
- *பயிற்றுநர் அதுபோல, குழந்தைத் திருமணத்தை தடுக்க உதவும் மற்ற பங்காளர்கள் யார், யார் என்று பட்டியலிட்டுச் சிந்தித்து எழுதச் சொல்ல வேண்டும்.*
- *ஒவ்வொரு குழுவையும் பயிற்சித்தாள்-2ல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை நிரப்பச் சொல்லவேண்டும். பயிற்சித்தாளில் உதாரணத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பங்காளர்கள்போல் மற்ற பங்காளர்களையும் பட்டியலிட்டு எழுதச் சொல்ல வேண்டும்.*
- *எளிமையான, செயல்படுத்தக்கூடிய சாத்தியமான மற்றும் குறிப்பான கருத்துக்களை எழுத வேண்டும் என்று பயிற்றுநர் கூற வேண்டும்.*

- குழுக்களில் அட்டவணையை நிரப்பிய உடன் பயிற்றுனர் குறிப்பில், கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.

- பின்னர், கருத்துத் தாளில் கூறியுள்ள கருத்துக்களையும் கூறி பயிற்றுநர் விளக்க வேண்டும்.

## பயிற்சித்தாள் 1 :

### நந்தினியின் கதை :

நந்தினிக்கு பத்து வயதிருக்கும் போது அவள் அம்மா இறந்துவிட்டார். நந்தினியையும் அவள் அக்காவையும் அப்படியே விட்டுவிட்டு அவள் அப்பா மறுமணம் செய்துகொண்டார்.

நந்தினியின் பெரியம்மா, நந்தினியையும் அவளது சகோதரியையும் தன் கிராமத்திற்குக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள். நந்தினியின் சகோதரிக்கு பதினேழு வயதாக இருக்கும்போதே அவள் பெரியம்மா அவளுக்குத் திருமணம் செய்துவிட்டார். அதேபோல் நந்தினிக்கு பதினாலு வயதிலேயே திருமணம் செய்ய நினைத்தார்.

நந்தினி : என்னோட புத்தகங்களைப் புரட்டிக்கிட்டு இருந்தப்ப ஒரு துண்டறிக்கை கையில் கிடைத்தது. பள்ளியில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் குழந்தைத் திருமணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு அதில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு போன் செய்யலாம் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. என்னுடைய பெரியம்மா போனை வைத்து விட்டு போயிருந்த சமயத்தில் அந்த எண்ணுக்கு போன் செய்தேன் .

குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரி திருவண்ணாமல :- அந்தப் போன்கால் சமூகநலத் துறைக்கு இணைக்கப்பட்டது, நந்தினியின் பேச்சில் பதற்றம் இருந்தாலும் உறுதியும் இருந்தது, திருமணத்தில் அவளுக்கு உடன்பாடில்லை என்பதை உணர முடிந்தது.

உடனடியாக தாசில்தார், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி, போலீஸ் அனைவருக்கும் தகவல் சொல்லி நாங்கள் அந்த கிராமத்திற்குள் நுழைந்தபோது இரவு ஒன்பதுமணி. நந்தினி அடையாளம் சொல்லியிருந்த கோயிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை, யாரைக் கேட்டாலும் கோயில் எங்கிருக்கிறது என்று சொல்ல மறுத்தார்கள். கிராம மக்கள் ஒத்துழைக்காவிட்டால் அரசு கிராமத்திற்கு செய்யும் உதவிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று மிரட்டினோம்.

ஒரு வயதானவர் மூலம் கோவில் இருந்த இடத்தை தெரிந்து கொண்டோம். கோயிலுக்கு அருகில் வந்தவுடன் மணமகனையும் அவன் தாயையும் பிடித்துவிட்டோம். அந்தம்மா திடீரென்று மாரடைப்பு வந்தது போல் நடித்தார்.

இப்படி போலீஸ் தேடுவதை நந்தினியின் பெரியம்மாவிடம் யாரோ போய் சொல்லிவிட்டார்கள். திருமண வீட்டுக்காரர்கள் லைட்டையெல்லாம் அணைத்து விட்டார்கள், ஒரு திருமணம் நடப்பதற்கான அறிகுறிகள் அங்கு இல்லாதிருந்தது.

நந்தினி: "என்னை நகைகளைக் கழற்றித் தரச் சொன்னார்கள், என்னுடைய பெரியம்மா,

திருமணத்தைப் பற்றி அதிகாரிகளிடம் சொல்லக்கூடாது என்றார். ஆனால் நான் மறுத்துவிட்டேன். மேலும் மிரட்டல்கள் அதிகமாவதற்குள், இரவு பத்தரை மணிக்கு அதிகாரிகள் நந்தினியை மீட்டு விட்டனர். பிறகு நந்தினி திருவண்ணாமலை குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் நந்தினியின் பெரியம்மா, மணமகனின் குடும்பம் இவர்கள் மேல் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

2018ஆம் ஆண்டு, தேசிய பெண் குழந்தைகள் தினத்தன்று பெண் குழந்தை தன்னுரிமை மேம்பாட்டிற்காக நந்தினி மாநில அரசிடம் இருந்து விருதினைப் பெற்றார்.

இந்த கேள்விகளைக் குழுவில் கலந்துரையாடல் செய்து பதில்களைப் பெறவேண்டும்:

1. ஏன் 15 வயதிலேயே திருமணம் செய்ய நினைக்கின்றனர்?
2. நந்தினியின் துணிச்சலுக்கு எவையெல்லாம் உதவின?
3. ஏன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இவ்வளவு வயது வித்தியாசத்தில் திருமணம் நடத்தப்படுகிறது?
4. குழந்தைத் திருமணத்தைத் தடுக்க சம்பந்தப்பட்ட பங்காளர்களால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

## பயிற்சித்தாள் 2 :

| பங்காளர் | பங்காளரை அணுகுவது எப்படி? | குழந்தைத் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிராக பங்காளர்களிடமிருந்து வரக்கூடிய பொதுவான வாதங்கள் எவை? |
|---|---|---|
| பஞ்சாயத்து உறுப்பினர்கள் | | |
| சமயத் தலைவர்கள் | | |
| பள்ளி ஆசிரியர்கள் | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

# கருத்துத் தாள்

குழந்தைத் திருமணமானது, சிக்கலான பல பிரச்சினைகளைக் கொண்டதால், சிக்கலான பல அடுக்கு நிலைத் தீர்வுகளும் தேவைப்படுகின்றன. எனவே, குழந்தைத் திருமணப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து பங்காளர்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அணுக வேண்டியது முக்கியம்.

இறுதியில் பெண்களுக்கு எப்படித் தான் திருமணம் நடத்திட முடியும்? அல்லது பாலியல் வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்குக் குழந்தைத் திருமணம் தான் நம்பகமான தீர்வு என்பது போன்ற பொதுவான தவறான வாதங்களைப் பற்று அனைத்துப் பங்காளர்களிடமிருந்தும் கேட்கலாம். இந்தக் கேள்விகளுக்குப் பதில்களை அளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். இது போன்ற திருமணங்களில் பாலியல் வன்முறை அதிகமாக உள்ளது என்பதற்கான ஆதாரங்களையும் வைத்திருக்க வேண்டும்.

நமது சமுதாயத்தில் பெண் குழந்தைகள் மதிப்புமிக்கவர்கள் என்பதையும் தாண்டி சாதனையாளர்கள் என்ற இடத்திலும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவேண்டும். அவர்கள் தாய்களாகவும் மகள்களாகவும் உருவாகிறார்கள். நமது பகுதியில் சிறந்து விளங்கும் பெண் சாதனையாளர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் நமது சமுதாயத்திற்கு எவ்வளவு பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறவேண்டும்.

சட்டம் மற்றும் திட்டங்கள் பற்றிய தகவல்கள் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு உதவியாக இருக்கும். சட்டப் பிரதிகளிலிருந்து பஞ்சாயத்துத் தலைவர்கள் தகவல்களை அறிந்து கொள்வார்கள். மேலும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் உள்ள 2006 ஆம் ஆண்டு இந்தியக் குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் அவர்களுக்கு தங்கள் வாதங்களை எடுத்துரைக்க உபயோகமாக இருக்கும். அந்தத் தலைவர்களுக்கு தங்களது மதிப்பையும் சமூகத்தில் அவர்களுக்கு உள்ள சிறப்பு அந்தஸ்தையும் புரியவைக்க வேண்டியது முக்கியம்.

ஆசிரியர்களைப் போலவே, பஞ்சாயத்து தலைவர்களும் சமுதாயத்தில் மிகுந்த மரியாதை உள்ளவர்கள். குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதில் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரிடம் எளிதாக தங்களின் செல்வாக்கைச் செலுத்த முடியும்.

சமயத் தலைவர்களுக்கும் அவர்களது சமுதாயத்தில் மிகுந்த மரியாதை இருக்கிறது. மற்ற பங்காளர்களும் சமய நூல்களிலிருந்து மேற்கோள்காட்டி, குழந்தைத் திருமணத்துக்கான காரணங்களையும் சுட்டிக்காட்டி வாதாடலாம். இதை எதிர்கொள்வதற்கு, நமது சமூகத்தில் பெண்களின் நிலை பற்றியும் திருமணம் பற்றியும் சமய நூல்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் குறித்துத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

# அமர்வு - 12



## நான் என்ன செய்ய முடியும்?

# நான் என்ன செய்ய முடியும்?

**கற்றலின் நோக்கம் :**

*குழந்தைத் திருமணம் மற்றும் அதன் தாக்கங்களைத் தடுத்திட என்னென்ன நடவடிக்கைகள் எப்படியெல்லாம் எடுக்கலாம் என்று பட்டியலிட்டு அதற்கு எந்தெந்த பங்காளார்களுடன் இணைந்து பணியாற்றலாம் என்று இந்த அமர்வின் இறுதியில் பங்கேற்பாளர்களால் திட்டமிட முடியும். சமுதாயத்தில், குழந்தைத் திருமணமுறையை முற்றிலுமாக முடிவிற்கு கொண்டுவருவோம், உயர்நிலைப்பள்ளி இடைநிற்றலைத் தடுப்போம், பாலினத்தை அடிப்படையாக கொண்டு தேர்வு செய்தலைத் தடுப்போம், வரதட்சிணை முறையைத் தடுப்போம், பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்போம் என்றும் அவர்கள் உறுதிமொழி ஏற்றுக் கொள்வார்கள்..*

**நேரம் :** *60 நிமிடங்கள்*

**தேவையான பொருட்கள் :** *படவிளக்கக் கையேடு (ஃபிலிப் சார்ட்), மார்க்கர் பேனாக்கள்*

**செயல்படுத்தும் விதம் :**

- *பங்கேற்பாளர்களை சிறு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அமர்வு -11க்குப் பயன்படுத்திய பங்காளர் பட்டியலையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பயிற்றுநர் கூற வேண்டும்.*

- *பங்காளரின் அட்டவணையைப் பயன்படுத்தி குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பங்காளரிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் உத்திகளை உருவாக்கச் சொல்லுங்கள்.*

- *எளிமையாகச் செய்யக்கூடிய வகையில் இந்தச் செயல்பாடு இருக்க வேண்டும் என்று கூற வேண்டும். ஒவ்வொரு குழுவாகப் பின்னர் பயிற்றுநர் குறிப்பில் உள்ள கேள்விகளைக் கேட்டு கலந்துரையாட வேண்டும்.*

- *இறுதியாக கருத்துத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை எடுத்துக் கூறி விளக்க வேண்டும்.*

**பயிற்றுநர் குறிப்பு :**

- எந்தெந்த யுக்திகளுக்கு வெற்றிகரமாக பயனளிக்க வாய்ப்புள்ளது? ஏன்?
- அனைத்துப் பங்காளர்களுக்கும் பொதுவான யுக்திகள் எவை?
- நமது யுக்திகளை பயனுள்ள வகையில் உருவாக்குவதற்கு நமக்கு என்ன ஆதரவு தேவைப்படுகிறது?

# கருத்துத் தாள்

இது, பயிற்சியின் கடைசி அமர்வாக இருப்பதால், நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் மிகவும் பயனளிக்கக் கூடியதாகவும் உள்ள ஒரு செயல் திட்டத்தை வகுப்பதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். பங்குதாரர்களுடன் இணைந்து பயனுள்ள வகையில் பணியாற்றிட சில படிநிலைகளை ஆலோசனைகளாக கீழ்க்காணும் அட்டவணை அளிக்கிறது. இவற்றில் பெரும்பான்மையான கருத்துகள், குழு அறிக்கைகளில் இடம் பெற்றவையாக இருப்பதால் அனைத்து குறிப்புகளும் முழுமையாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

| பங்காளர் | செயல்திட்டம் |
|---|---|
| பஞ்சாயத்து | • "குழந்தைத் திருமணத்தை எதிர்த்து போராடுவதற்கான சட்டம் மற்றும் கொள்கை ஆதரவு" – தகவல் கையேட்டின் பிரதிகளை, பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு அளித்து விளக்க வேண்டும்.<br>• கிராம சபைக் கூட்டத்தில் பஞ்சாயத்து உறுப்பினர்கள் இது குறித்த தகவல்களை எடுத்துரைக்க வேண்டும். |
| போலீஸ் | • காவல் துறையினரைச் சந்திக்க வேண்டும்.<br>• குழந்தைத் திருமணத்தின் அம்சங்கள், அதன் மூலம் வரக்கூடிய பிரச்சினைகள், அதன் விளைவுகள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து காவல்துறை அதிகாரிகளுடன் கலந்து விவாதிக்கவும்.<br>• ஒரு குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்துவதன் மூலம் மற்ற குழந்தைகளிடமும் குடும்பங்களிலும் இது குறித்த தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அத்துடன், குழந்தைத் திருமணம் இளம் வயதினரையும் குடும்பத்தினரையும் எப்படிப் பாதிக்கும் என்று கூறி குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காக போலீசுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும்.<br>• குழந்தைத் திருமணம் நடந்தால் அதற்கான சட்டப்படியான தண்டனை, அபராதம் ஆகியவற்றை பொதுக் கூட்டங்கள், விளம்பரங்கள் மூலம் காவல் துறை அதிகாரிகள் பொது மக்களுக்கு எடுத்துரைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். |

| | |
|---|---|
| குடும்பம் | • சிவில் சமூக அமைப்பு உறுப்பினர், அங்கன்வாடி பணியாளர், பஞ்சாயத்து உறுப்பினர், சாதி பஞ்சாயத்து உறுப்பினர், காவல்துறை, பள்ளி ஆசிரியர், இதர பங்காளா குழுலிருந்து சிலர் ஆகியோர் அடங்கிய குழுவை உருவாக்க வேண்டும். குழந்தைத் திருமணம் நடைபெறுவதாகத் தகவல் கிடைத்ததும், சம்பந்தப்பட்ட குடும்பங்களுடன் பேசி விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதிலும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதிலும் இக்குழுவினர் செயல்படவேண்டும்.<br>• குழந்தைத் திருமணம் செய்த ஒரு பெண், திருமண வயது வந்த பிறகு திருமணம் செய்த பெண் குறித்த மாதிரி சம்பவங்களைக் கூறவேண்டும்.<br>• வீதி நாடகங்களைப் பார்க்கச் சொல்லவேண்டும்.<br>• குழந்தைத் திருமண பிரச்சினை குறித்த வாசகங்களுடன் கூடிய சுவர்ச் சித்திரங்களைக் காட்டவும்<br>• சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி: குழந்தைத் திருமணத்தின் விளைவுகள் குறித்தும் இது குறித்த சட்டங்கள் குறித்தும் தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.<br>• குழந்தைத் திருமணத்தை எதிர்த்து போராடுவதற்கான சட்டம் மற்றும் கொள்கை ஆதரவு – தகவல் கையேட்டின் பிரதிகளை அளித்தும் அரசின் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் பயன்கள் குறித்தும் விளக்கிக் கூறலாம்.<br>• அனைத்துக் குழந்தைகளும் தங்களது பள்ளிப் படிப்பை முடிப்பதை உறுதிசெய்தல். |
| சமயத் தலைவர்கள் | • அனைத்து சமயத் தலைவர்களையும் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்யவேண்டும்.<br>• அந்த சமயத் தலைவர்கள் தலைமையில் ஏதேனும் திருமணம் நடைபெற்றால் முதலில் மணமகன் மற்றும் மணமகளின் திருமண வயதை உறுதி செய்து கொள்ளச் சொல்ல வேண்டும். அவர்களில் யாரேனும் ஒருவருக்கு திருமண வயது குறைவாக இருந்தால் உடனே கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் அல்லது உறுப்பினர், பெற்றோர்/ பாதுகாப்பாளர் ஆகியோருடன் கலந்து பேசி குழந்தைத் திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து அவர்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும். |

| | |
|---|---|
| **சமயத் தலைவர்கள்** | • சமயத் தலைவர்களை நேரடியாக ஈடுபடுத்த வேண்டும். இந்த விவாதத்தில் சமயத் தலைவர்களை அழைத்து வருவதில் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்த வேண்டும்.<br>• கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள், சமயத் தலைவர்களை அழைத்து வருவதற்கு உதவலாம். |
| **சமுதாயம்** | • அனைத்துத் தரப்பினரையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, குழந்தைத் திருமணம் குறித்த சட்டம் குறித்தும் குழந்தைத் திருமணத்தால் மணமகனுக்கும் மணமகளுக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், குழந்தைத் திருமணத்தால் பிறக்கும் குழந்தைகளின் நிலைமை குறித்தும் விளக்க வேண்டும்.<br>• குழந்தைப் பருவம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு விளக்க வேண்டும். குழந்தைகளுக்கு கல்வியும் விளையாடுவதற்கான நேரமும் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு சமூகத்தை ஊக்குவிக்க வேண்டும். வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லுதல், குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லுதல் போன்ற சுமைகளை பெண்குழந்தைகள் மீது ஏற்றக்கூடாது.<br>• அருகில் உள்ள கிராமங்களில் நடந்த சம்பவங்களை பங்காளர்கள் மூலம் கூறச் சொல்லலாம். நேர்மறையான சம்பவங்களையும் எதிர்மறையான சம்பவங்களையும் கூறலாம். நாடகங்கள், கூட்டங்கள், ஊர்வலம் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். |
| **பள்ளி / கல்வி நிலையங்கள்** | • பள்ளியில் குழந்தைகளின் வருகைப் பதிவு, இடைநிற்றல் குறித்து சரிபார்க்க வேண்டும்.<br>• குழந்தைத்திருமணத்துக்குஎதிர்ப்புத்தெரிவிப்பதைஉறுதிப்படுத்தும் வகையில் குழந்தைகளின் திறனை மேம்படுத்த வேண்டும்.<br>• சட்டப்படியான திருமண வயது குறித்த விவரங்களை அவர்களுக்கு அளிக்க வேண்டும். பள்ளி இடைநிற்றல் மற்றும் குழந்தைத் திருமணம் ஆகியவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைக்கான திட்டங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| **பள்ளி / கல்வி நிலையங்கள்** | • பெண் குழந்தைகளின் மதிப்பு பற்றி வகுப்பறைகளில் தனி அமர்வுகளில் விவாதிக்கலாம். குழந்தைத் திருமணத்தால் ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் இருபாலருக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்த அமர்வுகளையும் விவாதங்களையும் நடத்தலாம்.<br>• முடிவெடுத்தல், கூடிக் கலந்து பேசுதல் சமரச பேச்சுவார்த்தைத் திறன் குறித்த உரையாடலை ஊக்குவிக்கலாம்.<br>• "முடியாது" என்ற வார்த்தையைச் சொல்லத் தயங்கக்கூடாது என்பதை இளையதலைமுறையினருக்குக் கற்றுத் தரவேண்டும்.<br>• குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்துவதற்கு இளம் வயதினரைக் கொண்ட அமைப்பை உருவாக்க வேண்டும்.<br>• ஆசிரியர்களுடன் சேர்ந்து விழிப்புணர்ச்சியை உருவாக்குதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை நடத்தலாம்.<br>• குழந்தைத் திருமணம் மற்றும் வீட்டை விட்டு ஓடிப்போதல் போன்ற பிரச்சினைகளின் இருபக்க விளைவுகள் குறித்து மாணவர்களின் பங்கேற்புடன் விவாதிக்கலாம். |
| | • உயர் கல்வியை, மேம்படுத்துவதற்கு குறிப்பாகப் பெண் குழந்தைகளுக்கு சமீபத்திய தகவல்களையும் திட்டங்கள் குறித்த விவரங்களையும் வழங்க வேண்டும்.<br>• ஆசிரியர்கள், தெரிந்தோ தெரியாமலோ பாலின சார்புடன் பேசுவதோ பாரபட்சமாக நடத்துவதோ கூடாது.<br>• ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் வகையிலும் மாணவிகளின் இடைநிற்றலைத் தடுக்கும் வகையிலும் வளரிளம் பருவத்தினருக்கு நேசமான கழிப்பறை வசதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மாதவிடாய் நேரத்தில் பாதுகாப்பான கழிப்பறை வசதி இல்லாத காரணத்தினால் பல பெண் குழந்தைகள் படிப்பை இடையிலேயே விட்டு விடுகிறார்கள். |

இறுதியாக, இந்த அமர்வு முழுவதும் பங்கேற்பாளர்களின் தீவிரமான ஈடுபாட்டுக்காக அனைவருக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். பின்னிணைப்பு 2இல் குறிப்பிட்டுள்ளபடி, "குழந்தைத் திருமணத்தை முடிவிற்கு கொண்டு வருவோம்"என்ற உறுதி மொழியின் நகல்களை வழங்க வேண்டும். இறுதியாக, குழந்தைத் திருமணம், பள்ளி இடைநிற்றல், கருவிலேயே பாகுபாட்டுடன் பாலினத்தை தெரிவு செய்தல், வரதட்சணை முறை, பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று உறுதிமொழியை அமர்வை நடத்துநர் சொல்லச்சொல்ல, பங்கேற்பாளர்கள் தங்களிடம் உள்ள பிரதியைப் பார்த்து உறுதி மொழியை வாசிக்க வேண்டும்.

# இணைப்பு - 1



## மனித உரிமைகள்
## என்றால் என்ன?

# மனித உரிமைகள் என்றால் என்ன?

*மனித உரிமைகள் என்பது மிக அடிப்படையானது. அவை இல்லாமல் மக்கள் கண்ணியத்துடன் வாழ இயலாது. ஒருவரின் மனித உரிமைகள் மீறப்படும் நிலையில் அவன் அல்லது அவள் ஒரு மனிதப் பிறவியாகவே கருதப்படமாட்டார்கள். சிறுமியருக்கும் பையன்களுக்கும் பாலின அடிப்படையில் பாகுபாடு காட்டப்படும்போது அவர்களால், தங்களின் மனித உரிமைகளை முழுமையாக அனுபவித்து மகிழ இயலாது.*

*உதாரணமாக, வீட்டு வேலைக்காகவோ அல்லது திருமணத்துக்காகவோ இளம் பெண் குழந்தைகளின் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி விடுகிறார்கள். அதே சமயத்தில், குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வருவாய் ஈட்ட வேண்டும் என்பதற்காக அந்த வீட்டுப் பையன்களைத் தொடர்ந்து படிக்க வைக்கிறார்கள். சமூகமயமாக்கல், ஆண் பெண் இருவருக்கும் தங்களது உரிமைகளைப் பெறுவதில் பெரும் தாக்கத்தை உண்டு செய்கிறது.*

*மனித உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலம், மரியாதை, நியாயம், நீதி மற்றும் சமத்துவம் பற்றி நாமும் கற்றுக் கொள்வோம். இதன் பயனாக, நாம் நமது உரிமைகளைப் பெறுவதற்காக எழும் போது, மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பும் உருவாகிறது.*

*ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தின் (UDHR) ஏறத்தாழ 30 விதிமுறைகளையும் ஏற்றுக்கொள்வதாக, அனைத்து நாடுகளும் கையொப்பம் இட்டுள்ளன. வளரிளம் பெண்களுக்கான முக்கிய உரிமைகள் விவரம் :*

- *வாழும் உரிமை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு*
- *சித்தரவதையிலிருந்து விடுதலை*
- *நியாயமான விசாரணை*
- *பேச்சு உரிமை*
- *மத ரீதியான சுதந்திரம்*
- *நலவாழ்வு, கல்வி மற்றும் போதிய அளவிலான தரமான வாழ்க்கை நிலை*

*மக்கள் தங்களது உரிமைகளை அனுபவிக்க உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கங்களின் பொறுப்பாகும். மக்களுக்கான சட்டங்களையும் சேவைகளையும் உருவாக்கி அதனை நடைமுறைபடுத்துவதன் மூலம் மக்கள் தங்களது உரிமைகளை*

அனுபவிக்க முடியும். இதர மனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் நமக்கு உள்ளன. நமது மனித உரிமைகளைப் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு உள்ள அதே நேரத்தில் மற்றவர்களின் உரிமைகளுக்கும் உரிய மதிப்பு அளிக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் தனக்குரிய பேச்சு உரிமையை பயன்படுத்தும் போது, மற்றவரைத் தரம் தாழ்த்தி, அவர்களிடம் வெறுக்கத்தக்க மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் அவர்களது பாதுகாப்பு உரிமையை மீறாத வகையில் இருக்க வேண்டும். மனித உரிமை என்பது, மக்கள் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் - குடும்பம், சமுதாயம், கல்வி நிலையங்கள், பணி புரியும் இடம், அரசியல் மற்றும் சர்வதேச உறவுகள் போன்றவற்றில் எப்படி மற்றவர்களுடன் தொடர்பு கொள்கிறார்கள் என்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீதி, சமத்துவம், சமூக நலன் ஆகியவற்றை உறுதிப்படுத்துவற்கு மனித உரிமைகள் அவசியம் என்பதை அனைத்து இடங்களில் உள்ள மக்களும் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். ஆனாலும், மக்களின் மனித உரிமைகள் பல சந்தர்ப்பங்களில் அடிக்கடி மீறப்பட்டு வருகின்றன. வாழ்க்கை, கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றுக்கான உரிமைகளை சிறுமியரும் பெண்களும் அடிக்கடி இழந்து விடுகிறார்கள். எவருடைய உரிமைகளும் எப்போது வேண்டுமாலும் மீறப்படலாம். குடும்ப வன்முறை, பாலியல் சித்தரவதை போன்ற வன்முறைகளை தனிநபர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்வது பொதுவாக நடக்கும் விதி மீறலாகும்.

குழுப் பயிற்சி:

கீழ்க்காணும் அட்டவணையை குழுவில் விவாதித்து நிரப்பவேண்டும். மாதிரிக்காக ஒன்று நிரப்பப்பட்டுள்ளது.

| எனது உரிமைகள் | அது எதைக் குறிக்கிறது | தேவையான பொருள்கள் | பொறுப்பானவர்கள், பொறுப்புக்கு உரியவர்கள் |
|---|---|---|---|
| வாழ்க்கை, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்பு | கழிப்பறையை பயன்படுத்தும்போது பாதுகாப்பு | பாதுகாப்பான கழிப்பறைகள் – பள்ளிகளிலும் வீட்டிலும் | பெற்றோகள் ஆசிரியர்கள் |
| சித்திரவதையிலிருந்து விடுதலை | | | |
| நேர்மையான விசாரணை | | | |
| பேச்சுரிமை | | | |
| மதச் சுதந்திரம் | | | |
| நல வாழ்வு, கல்வி, போதிய வாழ்க்கைத் தரம் | | | |

# இணைப்பு - 2



## உறுதி மொழி ஏற்பு

# உறுதி மொழி ஏற்பு

**உறுதிமொழி :**

*குழந்தைத் திருமணத்தை முடிவிற்கு கொண்டு வருதல், கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிதல், பள்ளி இடைநிற்றல், வரதட்சணை முறை, பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகிய அனைத்தையும் தடுப்போம் என்றும் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியை நிகழ்த்தலாம்.*

*இந்திய குடிமகனான, குடிமகளான நான் ஏற்கும் உறுதிமொழி :*

*சட்டப் படியிலான திருமண வயதான, 21 வயதிற்கு கீழ் உள்ள ஓர் ஆணுக்கும் 18 வயதிற்கு கீழ் உள்ள ஒரு பெண்ணுக்கும் நடைபெறும் எந்தத் திருமண நிகழ்ச்சியிலும் நான் பங்கேற்க மாட்டேன். என் உறவினர்களுக்கும் சமுதாய மக்களுக்கும் இதைப் போல திருமணம் செய்யக்கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்துவேன்.*

*என்னுடைய சமுதாயத்தில், பெண்களின் உயர்கல்வி, ஊட்டச்சத்து, பெண்களுக்கான பாதுகாப்பு, சட்டப்படியான சொத்துரிமை அல்லது பரம்பரைச் சொத்து பெறுதல் போன்ற விஷயங்களில் பெண்களுக்கான உரிமைகளை நிலைநாட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் துணை நிற்பேன்.*

*என்னுடைய சமுதாயத்தில், கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை ஸ்கேன் மூலம் கண்டறிந்து கருக்கலைப்பு செய்வதை முழுமனதோடு தடுக்க முயற்சி செய்வேன். அதே போல் வரதட்சணை வாங்கும் பழக்கத்தையும் முழுமையாக அகற்றிட முழுமனதோடு முயற்சி செய்வேன் .*

*வீட்டில், தெருவில், பணிபுரியும் இடங்களில் அல்லது எங்கும் சமூகத்தில் பெண்களைப் பற்றியும் பெண் குழந்தைகளைப் பற்றியும் ஆண்களிடத்தில் நிலவும் தவறான மனோபாவங்களுக்கு ஊக்கமளிக்காமல் பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் உரிய மதிப்புக் கொடுக்கும் பழக்கத்தை சமுதாயத்தில் உருவாக்கப் பாடுபடுவேன்.*

*அனைத்துக் குழந்தைகளையும் வளரிளம் பருவத்தினரையும் பாதுகாக்க எனது சக்திக்குஉட்பட்டதைச் செய்வேன் என்றும் அவர்கள் உடல் ரீதியாகயும், உணர்வு ரீதியாகயும் அல்லது வேறு எந்த வகையிலும் புறக்கணிக்கப்படுவதற்கு எதிராகவும் செயல்படுவேன் என்று உறுதி கூறுகிறேன்.*